AUGUST 10, 2020
MONDAY
VOL: 006/069
RS. 10.00
PROVINCIAL

Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk
# தமிழ் Mirror



# ‘கிடைத்த வாய்ப்பை ஏற்கிறேன்’

- **எங்கள் ஆட்சிக் காலத்தில், இலங்கை முன்னோக்கிப் பயணிக்கும்**
- **இலங்கையர்கள் என்மீது நம்பிக்கை வைத்துள்ளனர்**

மக்களுக்கு மீண்டும் சேவை செய்ய, தனக்குக் கிடைத்த வாய்ப்பைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையர்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கை, எனது தேசத்துக்குத் தொடர்ந்து சேவையைச் செய்ய, என்னைத் தூண்டுகிறது என்றார்.

தொடர்ச்சி P2

விருப்பு வாக்குகளை


## ‘மீளெண்ணுவதற்கு நான் தயார்’



யாழ். மாவட்டத்தில் பெறப்பட்ட விருப்பு வாக்குகள் தொடர்பில் சந்தேகம் இருப்பின், சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றத்தை நாடமுடியுமெனவும், அவ்வாறு நீதிமன்றத்தை நாடினால், விருப்பு வாக்குகளை மீளெண்ணுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல்,

தொடர்ச்சி P2

## புதிய அமைச்சரவை புதனன்று பதவியேற்பு



புதிய அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை பதவியேற்பு வைபவம் , ஒகஸ்ட் 12ஆம் திகதியன்று, கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்திலிருக்கும் பார்வையாளர் மண்டபத்தில், நடைபெறும்.

புதிய அமைச்சரவை, ஒகஸ்ட் 14ஆம் திகதியன்று பதவியேற்குமென ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், புதிய உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல், இன்று (10) வெளியாகுமென அறிவிக்கப்பட்டதால்,

தொடர்ச்சி P2

## சுபநேரத்தில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்றார்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில், குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு, ஆகக்கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையின் 28ஆவது பிரதமராக, நேற்று (09) பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

தொடர்ச்சி P2

## மறுத்தார் ரணில்

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அக்கட்சிக்கு கிடைத்த தேசிய பட்டியலின் ஊடாக, நாடாளுமன்றத்துக்குச் செல்வதை மறுத்துவிட்டாரென தகவல்கள் தெரிவிக்கின்றன. அக்கட்சிக்கு கிடைத்துள்ள ஒரு தேசிய பட்டியல் வாய்ப்பை,

தொடர்ச்சி P2



## 5 வருட பயணத்தின் ஆரம்பம்

நாட்டின் 28ஆவது பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில், களனி, ரஜமஹா விகாரையில் வைத்து, நேற்று (09) காலை பதவியேற்றார். (படப்பிடிப்பு – பிரதீப் பத்திரண)

கூட்டமைப்பின் தேசிய பட்டியலில்

## கலையரசன் நியமனம்



■ கனகராசா சரவணன், சகா, யுதாஜித், பாறுக்ஷிஹான்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேசிய பட்டியல் எம்.பியாக, கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரான தவராசா கலையரசன் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த இலங்கை தமிழரசு கட்சியின் செயலாளர் எஸ்.

தொடர்ச்சி P2

அத்துரலிய, ஞானசாரருக்கு இடையிலான

## முரண்பாட்டுக்கு முற்றுப்புள்ளி

■ றம்ஸி குத்தூஸ்

கொடிச் சின்னத்தில் போட்டியிட்டு, எமது மக்கள் சக்தி கட்சிக்குக் கிடைத்த தேசிய பட்டியலைப் பகிர்ந்து கொள்வதில், அத்துரலிய ரத்தன தேரர், ஞானசார தேரர் ஆகியோருக்கு இடையில், ஏற்பட்ட முரண்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## பிரதமரின் முன்பாகவுள்ள எதிர்கால சவால்கள் என்ன?

### தின தந்தியில் வெளியான தகவல்

இந்தியாவிலிருந்து வெளிவரும் தினத்தந்தி பத்திரிகையில், இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முன்பாக உள்ள சவால்கள் எவை, என்பது தொடர்பில் ஆறு முக்கியமபன விடயங்களைக் குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## மறுத்தார் சமல்

புதிய நாடாளுமன்றத்தில், சபாநாயகர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, தனிப்பட்ட ரீதியில் விடுத்த கோரிக்கையை, சமல் ராஜபக்ஷ, மறுத்துவிட்டாரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சபாநாயகர் பதவி தனக்கு வேண்டாம் எனவும் ஆனால், மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய அமைச்சுப் பதவியொன்றை வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## சு.க எம்.பிகளுடன் மைத்திரி சந்திப்பு



புதிய நாடாளுமன்றத்துக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில், தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேவுக்கும் இடையில், கொழும்பிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் முக்கியச் சந்திப்பொன்று நேற்று (09) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

சூடுபிடிக்கிறது தேசிய பட்டியல்;

## இறுதி முடிவுக்காக இன்று சந்திப்பு

■ றம்ஸி குத்தூஸ்

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் விவகாரம், சூடுபிடித்துள்ள நிலையில், தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில், இன்று (10) முக்கியக் கூட்டமொன்று நடத்தப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சஜித் பிரேமதாஸ தலைமையில், ஐக்கிய மக்கள் சக்திக்குள் இணைந்து போட்டியிட்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்,

தொடர்ச்சி P2

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்



■ சகா, ஏ.எச்.ஏ. ஹுஸைன்

நீண்ட விடுமுறைக்குப் பின்னர், நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளும், இன்று (10) ஒரே தடவையில் மீண்டும் திறக்கப்பட்டு, கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில்,

தொடர்ச்சி P2

ஒகஸ்ட் 10 முதல் பாடசாலைகள் திறக்கப்படும் முறை

| நாள் | தரங்கள் |
|---|---|
| திங்கள் | 6,10,11,12,13 |
| செவ்வாய் | 7,10,11,12,13 |
| புதன் | 8,10,11,12,13 |
| வியாழன் | 9,10,11,12,13 |
| வெள்ளி | 9,10,11,12,13 |

பாடசாலை நேரம் தரங்கள் 6,7,8,9

பாடசாலை நேரம் தரங்கள் 10,11,12,13

©DM GraphicDesk

## ‘தலைமையைக் கைப்பற்ற யாருக்கும் இடமளியேன்’

### முரண்டு பிடிக்கிறார் ரணில்



நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தோல்வியுற்றிருந்த போதும், அக்கட்சியின் தலைமைத்துவத்தை விட்டுச் செல்லும் நோக்கம் தனக்கு இல்லையென ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளாரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியிருப்பதாகவும்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## கலையரசன் நியமனம்

துரைராஜசிங்கம், அவருடைய பெயர், தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்க ப்பட்டுள்ளது என்றார்.

மட்டக்களப்பு, நல்லையா வீதியிலுள்ள தமிழரசுக் கட்சியின் காரியாலயத்தில் நேற்று (11) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இடம்பெற்ற தேர்தலில் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பின்னடைவைக் கண்டுள்ளது. அதேவேளை, எமது கட்சித் தலைவர், பொதுச்செயலாளரான நான், ஆகிய இருவரும் தோற்கடிக்கப்பட்டுள்ளோம் எனத் தெரிவித்த அவர், இதற்காகப் பலவிதமான விமர்சனங்கள் வந்துகொண்டுள்ளன. எது எப்படியிருந்தபோதும், எமது தலைவரின் சிறந்த தலைமைத்துவத்துடன் முன்நகர்த்திச் சென்று கொண்டிருக்கின்றோம் என்றார்.

"தலைமைப் பொறுப்பை ஏற்பதற்குத் தயாரென உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கும் கூற்றை முற்றாக நிராகரிக்கின்றேன். எந்த விதத்திலும் இவ்வாறான அறிக்கைகள் விடுவது, கட்சியின் கட்டுக்கோப்புக்கும் விசுவாசத்துக்கும் எதிரானது" என்றார் .

கட்சியினுடைய தலைமையின் மீது, எங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது. அந்தவகையில் நாங்கள் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருப்போம். இந்தத் தேர்தல் முடிவடைந்தவுடன், ஜனநாயக அடிப்படையில் எனக்கு ஏற்பட்ட இந்தத் தோல்வியை ஏற்றுக் கொண்டு, தலைவர் சம்பந்தன் ஐயாவைச் சந்தித்து, மக்கள் எனக்கு ஆணை வழங்கவில்லை என்ற அடிப்படையில், பொதுச் செயலாளர் பதவியை நான் துறக்க அனுமதிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டேன்.

> **இதை யாருக்கு வழங்குவதெனப் பல்வேறு கருத்துகள் பரிமாற்றப்பட்டன. தேர்தலுக்கு முன்னர், தேசிய பட்டியல் தயாரிக்கும் போது, சிலருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென இருந்தன**

"பொதுச் செயலாளருக்கு, தேர்தல் கடமைகள் பல இருப்பதாகவும், இது தொடர்பாக எமது பொதுச் சபை தான் முடிவு எடுக்கவேண்டும் என்பதால், நீங்கள் பதவியைத் துறக்கக்கூடாது என கட்டளையிட்டதன் அடிப்படையில், நான் தொடர்ந்து இந்தப் பணியைச் செய்ய வேண்டியவனாக இருக்கின்றேன்" என்றார்.

"தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு, தேசிய பட்டியல் ஆசனம் ஒன்று கிடைத்துள்ளது. இதை யாருக்கு வழங்குவதெனப் பல்வேறு கருத்துகள் பரிமாற்றப்பட்டன. தேர்தலுக்கு முன்னர், தேசிய பட்டியல் தயாரிக்கும் போது, சிலருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென இருந்தன. ஆனால், அம்பாறையிலுள்ள அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கே, தேசிய பட்டியலை வழங்க வேண்டும் என்ற முடிவின் பிரகாரம், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தவராசா கலையரசன் பெயரைப் பரிந்துரை செய்து, தேர்தல் ஆணைக்குழுவுக்கு உடனடியாக அனுப்பி வைத்துள்ளேன்" என்றார்.

# 'கிடைத்த வாய்ப்பை ஏற்கிறேன்'

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் களனி ரஜமகா விகாரையில் பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை மீண்டும் பதவியேற்றார். அதன் பின்னர், அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், அவர் மேலும் தெரிவிக்கையில், "மக்களுக்கு மீண்டும் சேவை செய்ய, எனக்குக் கிடைத்த வாய்ப்பைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்கின்றேன். அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடனான எங்கள் ஆட்சிக் காலத்தில், இலங்கை முன்னோக்கிப் பயணிக்கும் என்பதை, நான் உறுதியுடன் தெரிவிக்கின்றேன்" என்றும் பதிவிட்டுள்ளார்.

## 'மீளெண்ணுவதற்கு நான் தயார்'

ஒத்துழைப்பு வழங்குவேனெனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிட்டு, வெற்றியீட்டியுள்ள சுமந்திரனின் விருப்பு வாக்குகளில், குளறுபடி இடம்பெற்றுள்ளதாக சசிகலா ரவிராஜ் தரப்பினர் குற்றஞ்சாட்டி வருகின்றமை தொடர்பில், தமிழ்மிரருக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சுமந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

"கடந்த 10 ஆண்டுகளாக, நேரடி அரசியலில் ஈடுபட்டு வருகின்றேன். இரண்டு தடவை போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ளேன். இந்நிலையில், அரசாங்க அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டுவதை நான், ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அவர்கள் தங்களின் பணிகளைச் சிறப்பாகச் செய்கின்றனர். விருப்பு வாக்குக் குளறுபடியென்பதற்குச் சாத்தியமே இல்லை. யாழ். மாவட்டத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் இரண்டாவது அதிகூடிய வாக்குகள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. எனக்கு அடுத்த இடத்தில் இருக்கின்ற சித்தார்த்தனுக்கும் எனக்கும் கிட்டத்தட்ட 04 ஆயிரம் விருப்பு வாக்குகள் வித்தியாசமிருக்கின்றன. அதற்கு அடுத்த நிலையில்தான் சசிகலா இருக்கின்றார். ஆகவே, 4 ஆயிரத்துக்கும் அதிக வாக்கு வித்தியாசத்தில் குளறுபடிகள் இடம்பெற்றிருக்கின்ற என்று கூறுவது சிறுபிள்ளைத்தனமானது.

"அப்படியொரு சந்தேகம் இருக்குமாக இருந்தால், அவர்கள் தாராளமாக நீதிமன்றத்தை நாடமுடியும். அப்படி நாடினால், விருப்பு வாக்குகளை மீள எண்ணுவதற்கு நான் எதிர்ப்புத் தெரிவிக்கப்போவதில்லை. தாராளமாக எண்ணட்டும். நடைமுறைச் சாத்தியமில்லாத விடயங்களைப் பூதாகரமாக்கி, அரசியல் சுயலாபமீட்டச் சிந்திக்கும் தீயசக்திகளுக்கு நீதிமன்றத்தினூடாகப் பதில் வழங்க முடியும். எனவே, அந்தச் சந்தர்ப்பத்தை நானும் வரவேற்கின்றேன்" எனவும் எம்.ஏ. சுமந்திரன், மேலும் தெரிவித்தார்.

## சுபநேரத்தில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றார்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில், வரலாற்றுப் புகழ்மிக்க களனி ரஜமஹா விகாரையில் வைத்து, நேற்றுக்காலையில் இருந்த 9.32 சுபநேரத்தில் பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

மதத்தலைவர்கள், மட்டுப்படுத்தப்பட்ட தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்பில், மிகவும் எளிமையான முறையில் இந்தப் பதவியேற்பு வைபவம் நடைபெற்றது.

1970ஆம் ஆண்டில் பெலியத்த தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, நாடாளுமன்றத்துக்கு முதன்முறையாகத் தெரிவான மஹிந்த ராஜபக்ஷ, நான்காவது முறையாக, நேற்று (09) பிரதமராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாக்க குமாரதுங்கவால், 2004இல் முதன்முறையாகப் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

> **1970ஆம் ஆண்டில் முதன்முறையாகத் தெரிவான மஹிந்த ராஜபக்ஷ, நான்காவது முறையாக, நேற்று (09) பிரதமராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்**

அதன்பின்னர், 2018 ஒக்டோபர் 28ஆம் திகதியன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், நியமிக்கப்பட்டார்.

அந்த நியமனம் அரசமைப்பை மீறும் செயலாகுமென உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டதால், பிரதமராக நியமிக்கப்பட்ட 52 நாள்களில், தன்னுடைய பதவியை இராஜினாமாச் செய்துகொண்டார்.

மஹிந்த ராஜபக்ஷ, புதிய பிரதமராகப் பதவியேற்றுக்கொண்டதன் பின்னர், விஹாரையில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளில் ஜனாதிபதியும் பிரதமரும் அவர் கலந்துகொண்டனர்.

(படப்பிடிப்பு பிரதீப் பத்திரண)

## முரண்பாட்டுக்கு முற்றுப்புள்ளி

கம்பஹா மாவட்டத்தில் அக்கட்சி போட்டியிட்டபோதும் உறுப்பினர்களைத் பெற்றுக்கொள்வதற்குப் போதுமான வாக்குகள் அக்கட்சிக்குக் கிடைக்கவில்லை.

ஆனால், அக்கட்சி பெற்ற மொத்த வாக்குகளின் பிரகாரம், தேசிய பட்டியலில் உறுப்பினர் ஒருவரைப் பெறக்கூடிய வாய்ப்புள்ளது அதற்காகவே, இவ்விரு தேரர்களுக்கு இடையிலும் முரண்பாடு நிலவியது.

இந்நிலையில், "தேசிய பட்டியல் நியமனத்தில் எவ்வாறான முரண்பாடுகளும் இல்லையெனவும் கலகொட அத்தே ஞானசார தேரரை நியமிப்பதற்கு கட்சியின் மத்திய குழு தீர்மானித்து விட்டது" என, எங்கள் மக்கள் சக்தி கட்சியின் ஊடாகச் செயலாளர் ஏரந்த நவரத்ன தெரிவித்தார்.

கட்சியின் தலைவர், செயலாளரால், இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுவிட்டது என்றார்.

கடந்த பொதுத் தேர்தலில், எங்கள் மக்கள் சக்தி கட்சி, 67,758 வாக்குகளைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## மறுத்தார் சமல்

அரசமைப்பில் 18, 19ஆவது திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்ட 2010-2015 காலப்பகுதியில், சமல் ராஜபக்ஷ, சபாநாயகராகப் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

சகல வகுப்புகளும் ஆரம்பமாகும். ஏனைய பாடசாலைகளில், 5,10,11,12,13 ஆகிய 5 வகையான வகுப்புகள் எல்லா நாள்களும் நடைபெறும்.

ஏனைய வகுப்புகள் நாள் ரீதியில் நடைபெறும். அதாவது, நாளொன்றுக்கு 7 வகையான வகுப்புகள் நடைபெறும். அன்றைய நாளுக்கு, அந்த வகுப்பு மாணவர்கள் மாத்திரமே சமுகமளிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

அதன்படி, திங்கள் கிழமை தரம் 01,06ஆம் வகுப்பு மாணவர்களும், தரம் 02, 07ஆம் வகுப்பு மாணவர்கள் செவ்வாய்க்கிழமையும் புதன்கிழமை தரம் 03, 08ஆம் வகுப்பு மாணவர்களும் வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் தரம் 04, 09ஆம் வகுப்பு மாணவர்களும் பாடசாலைக்குச் சமுகமளிக்க வேண்டும்.

அதாவது, வாரத்தில் ஒருநாள் அல்லது இரண்டு நாள்கள் மாத்திரமே மாணவர்கள், பாடசாலைக்குச் சமுகமளிக்கும் வகையில் இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பேணும் வகையில், மிகவும் கவனமாக இக்கால அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று முற்றாக நாட்டைவிட்டு நீங்கியதும் காலப்போக்கில் வழமையான நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேரத்தைப் பொறுத்தவரை, தரம் 10,11,12,13 வகுப்புகளுக்கு காலை 7.30 முதல் மாலை 3.30 வரையும் ஏனைய வகுப்புகளுக்கு வழமையான நேரப்படியும் நடைபெறும்.

பி.ப. 1.30 மணிக்கு முடிவடையும் வகுப்புகளுக்கு ஓர் இடைவேளை வழமைபோன்றும் பி.ப. 3.30 மணிக்கு முடிவடையும் வகுப்பு மாணவர்களுக்கு இரண்டு இடைவேளைகள் அதுவும் 20 நிமிடத்துக்கு மேற்படாத வண்ணம் வழங்கப்படுதல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

அனைத்து ஆசிரியர்களும் கல்விசாரா ஊழியர்களும் இன்று (10) முதல் கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும். கற்பித்தலுக்கு மேலதிகமாக மேற்பார்வை மதிப்பீடுகளைப் பரீட்சித்தல், சுகாதாரம், ஒழுங்கு பேணல் கருமங்களிலும் பொறுப்புகளைக் கையேற்க வேண்டும்.

பி.ப. 3.30 மணிவரை நேரசூசி உள்ள ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஆசிரியர்களுக்குமான கடமை நேரம் மு.ப. 7.30 மணி தொடக்கம் பி.ப.1.30 மணி வரை இருக்கும்.

பாடசாலை மட்டக் கணிப்பீடுகள், க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான முடிக்கப்படாத பரீட்சைகளைத் தவிர, தவணைப்பரீட்சைகளையோ வேறு பரீட்சைகளையோ நடத்தக்கூடாது என்றும் கல்வியமைச்சால் ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமரின் முன்பாகவுள்ள எதிர்கால சவால்கள் என்ன?

- ராஜபக்ஷ சகோதரர்கள் பெருவெற்றி பெற்றுள்ளதால் அவர்களின் குடும்ப ஆதிக்கம் வலுப்பெறும். ராஜபக்ஷ, தன் மகன் நாமல் ராஜபக்ஷவை வருங்கால அதிபராக முன்னிறுத்தக்கூடும். இதனால் அவரது சகோதரர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்படவும் வாய்ப்புள்ளது.
- 19ஆவது அரசமைப்பு திருத்தத்தின் பிரகாரம், ஒருவர் 2 முறைக்கு மேல் ஜனாதிபதியாக இருக்கக்கூடாது என்ற சட்டத்தைத் தன் பெரும்பான்மை பலத்தை கொண்டு ராஜபக்ஷ மாற்ற முயற்சிப்பார் என சொல்லப்படுகிறது. அரசமைப்பில் இது போல சில மாற்றங்களைச் செய்ய ராஜபக்ஷ, முயல்வார். இதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எந்தளவுக்கு ஒத்துப் போவார் என்பது கேள்விக்குறியாகும்!
- அனைத்து மக்களுக்கும் பொதுவான ஓர் ஆட்சியைத் தர வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவருக்கு பலதரப்பிலும் இருப்பதால், அவர் ஒரு சார்பு நிலையை சுலபத்தில் எடுக்க முடியாது.
- ஏற்கெனவே, 2009 யுத்தம் தொடர்பான மனித உரிமை மீறல்கள், உயிர்பலிகள் தொடர்பாக சர்வதேச அளவில் மஹிந்த ராஜபக்ஷவின், பெயர் சரிந்துள்ளதால் அதைச் சரி செய்வதற்குக் கிடைத்த வாய்ப்பாக இந்த ஆட்சியை அவர் பயன்படுத்த கூடும் என்று அரசியல் நோக்கர்கள் கணிக்கின்றனர்.
- ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டணியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக இடது முன்னணி, முற்போக்கு தமிழ் கட்சி, இலங்கை மக்கள் ஜனநாயக கட்சி, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி ஆகிய 10-க்கும் மேற்பட்ட பலதரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிற ஜனநாயக அமைப்புகள் உள்ளதால் தமிழர்களை பாதிக்கும் அதிகார அத்துமீறல்களுக்கு இடம் இருக்காது என்றும் அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.
- பொருளாதார ரீதியாக இலங்கையை மேம்படுத்த வேண்டும். பெரிய வல்லரசு நாடுகளின் நிர்ப்பந்தத்துக்குப் பணியாத, இறையாண்மை கொண்ட தனித்துவமிக்க நாடாக இலங்கையைப் பாதுகாக்க வேண்டும். நிரந்தர அமைதியையும், சமூக நல்லிணக்கத்தையும் சாத்தியப்படுத்த வேண்டும் ஆகியவையே தற்போதைய ஆட்சியாளர்கள் முன்புள்ள சவால்களாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சு.க எம்.பிகளுடன் மைத்திரி சந்திப்பு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்தும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கைச் சின்னத்தில் போட்டியிட்டும் இம்முறை, 14 பேர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, மஹிந்த அமரவீர, நிமல் சிறிபாலடி சில்வா, துமிந்த திஸநாயக்க, ரஞ்ஜித் சியம்பலாப்பிட்டிய, துஷ்மன்ன மித்திரபால, அங்கஜன் இராமநாதன், காதர் மஸ்தான், லசந்த அழகியவண்ண, ஷாமர சம்பத் தஸநாயக்க, சான் விஜயலால் சில்வா, ஷாந்த பண்டார, ஜகத் புஸ்பகுமார ஆகியோர் சுதந்திரக் கட்சியின் சார்பில் இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது என, கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

## புதிய அமைச்சரவை புதனன்று பதவியேற்பு

புதிய அமைச்சரவை பதவியேற்பை இரண்டு நாள்களுக்கு முன்னமே நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலரும் உள்வாங்கப்படுவர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மறுத்தார் ரணில்

யாருக்கு கொடுப்பது என்பது தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படவில்லை என்றும், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அந்த தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலில் பின்னடைவுகளை சந்தித்தாலும் மக்களின் சேவையிலிருந்து தான் விலகுவதற்கு தயாரில்லையென ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

## இறுதி முடிவுக்காக இன்று சந்திப்பு

தமிழ் முற்போக்குக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள், தேசிய பட்டியல் விவகாரத்துக்காக, இன்று (10) வரையிலும் காலக்கெடு விதித்துள்ளன.

தங்களுக்கு உரிய தேசிய பட்டியல் ஆசனங்களை வழங்காவிடின், நாடாளுமன்றத்தில் தாங்கள், தனிக் குழுவாகச் செயற்படப்போவதாக அறிவித்துள்ளன. இந்நிலையிலேயே இன்று (10) முக்கியக் கூட்டமொன்று சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெறவுள்ளது.

இதை உறுதிப்படுத்த, மேற்குறித்த கட்சிகளின் தலைவர்களுடன் தொடர்பு கொள்ளப் பலமுறை முயற்சித்த போதும், அவர்களின் அலைபேசிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

## 'தலைமையைக் கைப்பற்ற யாருக்கும் இடமளியேன்'

பாரிய தோல்விக்குப் பின்னர், கட்சி எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, கட்சியின் தலைமைப் பதவியில் தான் தொடர்ந்திருக்க உள்ளதாகவும், கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஒருவருக்கும் இடமளிக்கப்போவதில்லை எனவும் கூறியுள்ளார். இதன்போது, டீ.எஸ். சேனாநாயக்கவால் உருவாக்கப்பட்ட பழைமையான கட்சியான ஐக்கிய தேசிய கட்சியைச் சிதைத்துவிடக் கூடாதென அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுக்கொண்டனர் எனவும், அதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, தலைமைத்துவத்தில் இருந்துகொண்டே கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகளை உரியவர்களுக்குக் கையளிப்பேன் எனத் தெரிவித்துள்ளாரென அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சீன ஜனாதிபதி புதிய பிரதமருக்கு வாழ்த்து



நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று, நாட்டின் 13ஆவது பிரதமராகப் பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு, சீனா ஜனாதிபதி ஷீ ஜிங் பிங், வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இந்த வாழ்த்து தொடர்பாக, தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சீன ஜனாதிபதியுடைய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னேற்றத்துக்கு, சீனா பல தசாப்தங்களாக ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கைக்கு அழைப்பு விடுக்கிறது இந்தியா



புதுப்பிக்கப்பட்டுள்ள இந்தியாவின் குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தில் விமான சேவைகளை முன்னெடுக்க வருமாறு இலங்கைக்கு இந்திய அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அந்நாட்டு பிரதமர் நரேந்திர மோடியால் விடுக்கப்பட்ட அழைப்பை, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

இதன்போது, கருத்துத் தெரிவித்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இறுதித் தேர்தல் முடிவுகள் கிடைக்கப்பெறும் முன்பாக, இந்தியப் பிரதமர் தனக்குத் தெரிவித்திருந்த வாழ்த்துகளுக்கு நன்றிகளைக் கூறியுள்ளார்.

### ஏற்றுமதிப் பொருள்களுடன்,

# அமெரிக்காவுக்கான விமான சேவைகள் மத்தளையிலிருந்து

ஹம்பாந்தோட்டை மத்தள விமான நிலையத்துக்கு எமிரேட்ஸ் விமானமொன்று நேற்று (09) முதல் முறையாக வந்திருந்துடன், இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்குப் பொருள்களை ஏற்றுமதிச் செய்யும் பணிகளையும் எமிரேட்ஸ் விமான சேவை நிறுவனம் நேற்று முதல் ஆரம்பித்தது.

அதன்படி அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கான பொருள்கள் ஏற்றுமதிச் சேவை, இனி மத்தள விமான நிலையத்திலிருந்து தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றும் விமான நிலைய முகாமையாளர் கசுன் கலன்சூரிய தெரிவித்துள்ளார்.

அத்தோடு, ஐந்து வருட காலமாக இயங்காதிருந்த இந்த விமான நிலையமானது, கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்த காலத்தில், மீண்டும் விமான சேவைப் பணிகளை ஆரம்பித்திருந்ததோடு, ஜுன், ஜுலை மாதங்களில் 70க்கும் மேற்பட்ட விமானப் போக்குவரத்துச் சேவைகள், இந்த விமான நிலையத்தை மய்யப்படுத்தி முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி காலப்பகுதியில், 2,500 க்கும் மேற்பட்ட விமானப் பயணிகளுக்குச் சேவை வழங்க, இந்த விமான நிலையத்தால் முடிந்துள்ளதெனவும், இந்நிலையிலேயே, நேற்று முதல் அமெரிக்காவுக்குப் பொருள்களை ஏற்றுமதிச் செய்யும் பணிகள், இந்த விமான நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, 28 டொன் ஏற்றுமதிப் பொருள்களை எமிரேட்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் அமெரிக்காவுக்கு ஏற்றிப் பறந்துள்ளதுடன், இலங்கைக்கு வரும் பிரபலமான விமான சேவைகள் பல, மத்தள விமான நிலையத்தினூடாகச் சேவைகளை வழங்குவதற்கு தயார் நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

அதன்படி, டுபாயிலிருந்து மத்தளைக்கு வந்த எமிரேட்ஸ் விமானமானது, 406 பயணிகளுடன் வந்திருந்ததெனவும், நேற்று மாலை 4.30 மணியளவில் மத்தளையிலிருந்து அமெரிக்காவை நோக்கிப் பறந்ததெனவும், எதிர்வரும் நாள்களிலும் தொடர்ச்சியாக பணிகளை முன்னெடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.




### ஜனாதிபதி கோட்டாபயவின்

# தசாப்த ஆட்சியை ஆரம்பிப்போம்



கொரோனா வைரஸ் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் நாட்டு மக்கள் வாக்குகளை அளிக்கச் சென்றதால், பொதுஜன பெரமுனவின் வெற்றி விஷேடமானதாகக் கருதப்பட வேண்டுமெனத் தெரிவிக்கும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, இந்த வெற்றியுடன் கோட்டாவின் தசாப்த ஆட்சி ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவித்தார். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றி தொடர்பாக ஊடங்களுக்கு கருத்துரைத்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்கள் வழங்கியிருக்கும் ஆணையை கௌரவத்துடனும் சவாலாகவும் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு கிடைத்த பெரு வெற்றியுடன், கோட்டாவின் தசாப்த ஆட்சி ஆரம்பிக்கின்றதென தெரிவித்த அவர், மக்கள் ஆணைக்கு மதிப்பளித்துச் செயற்படும் சவாலை ஏற்றுக்கொண்டு செயற்படச் சகலரும் தயாராக வேண்டியது அவசியம் என்றார்.

அதன்படி தேசிய சுதந்திர முன்னணி சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவான 6 எம்.பிக்களையும் அக்கட்சி மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு, 2015 ஆம் ஆண்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையிலிருந்து வெளியேறி வீட்டுக்குச் சென்ற காட்சிகளைக் கண்ட பலரும் மனமுடைந்து போயினர் எனத் தெரிவித்த அவர், அவ்வாறு உடைந்துபோன மனங்களின் ஆதங்கங்களை ஒன்று திரட்டி, ஓர் அரசியல் சக்தியைத் தோற்றுவிக்கத் தங்களால் முடிந்ததெனவும் தெரிவித்தார்.

அதன்படி, 2015 பெப்ரவரி 18 ஆம் திகதி நுகேகொடவில் ஆரம்பமான மஹிந்த சூறாவளி, இன்று பொதுத்தேர்தலைப் பெருமளவில் வெற்றி கொள்ளும் அளவுக்கு வலுவடைந்துள்ளதெனத் தெரிவித்த அவர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைத் தேர்தலை வெல்ல வைத்ததுடன் நிறுத்திக்கொள்லாமல், இன்று 2/3 இலக்கையும் அக்கட்சியால் அடைந்துகொள்ள முடிந்துள்ளதெனவும் தெரிவித்தார்.

இதற்கு முன்பாக, ஜனாதிபதி தேர்தலை வெற்றி கொண்ட எந்தவொரு கட்சிக்கும், நாடாளுமன்றத் தேர்தலில் வலுவான ஆட்சி அதிகாரம் ஒன்று கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்த அவர், ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது கொண்டிருந்த 60 சதவீத நம்பிக்கை நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அதன்படி, பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்ததால் இந்த வெற்றி மேலும் விஷேடமாகின்றதென தெரிவித்த அவர், தேசிய சுதந்திர முன்னணிக்கான 6 ஆசனங்களுடன் 151 ஆசனங்களை ஆளும் தரப்புக்காக நாட்டு மக்கள் பெற்றுக்கொடுத்துள்ளனர் என்றார்.



# வாழ்த்துகள்...

நாட்டின் 13ஆவது பிரதமராக, நேற்று (09) பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ, கொழும்பு கங்காராம விகாரைக்குச் சென்று, வழிபாட்டில் ஈடுபட்டார். இதன்போது, இந்து மதகுருமார்கள், அவருக்குப் பொன்னாடை போர்த்தி, வாழ்த்துகளைத் தெரிவித்தனர். (படப்பிடிப்பு: குஷான் பதிராஜ)

# கிவ் தோட்டத்திலிருந்து இளைஞரின் சடலம் மீட்பு

■ எஸ்.சதீஸ்

பொகவந்தலாவ - கிவ் மேற்பிரிவு தோட்டப் பகுதியிலிருந்து, இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக, பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம், நேற்று முன்தினம் (08) மாலையில் இடம்பெற்றதாகத் தெரிவித்த பொலிஸார், குறித்த இளைஞன், தனது மனைவியின் வீட்டுக்கு வந்திருந்த போது, அங்கு முகம் கழுவச் சென்றபோது தவறி விழுந்துள்ளார் என்று, மனைவி தெரிவித்துள்ளாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தவறி விழுந்ததாகக் கூறப்படும் இளைஞனை, டிக்கோயா கிழங்கன் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்ற போதே, அவ்விளைஞன் உயிரிழந்துள்ளாரெனவும் எவ்வாறாயினும், இளைஞனின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த இளைஞன், திருமணம் முடித்து ஆறு மாதங்களேயான நிலையில், டிக்கோயா - மாணிக்கவத்த இரண்டாம் பிரிவைச் சேர்ந்த 36 வயதுடைய செல்வராஜ் கிருஸ்ணமுர்த்தி என்பவரே, இவ்வாறு உயிரிழந்துள்ளார் என, பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



இளைஞனின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதால், சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு, தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டுள்ளதோடு, ஹட்டன் நீதவான் தலைமையில் மரண விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னரே, இது கொலையா அல்லது தவறி விழுந்தமையால் ஏற்பட்ட மரணமா என்று உறுதியாகக் கூறமுடியுமென, பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதற்காக, சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக, சடலம் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதெனவும் மேலதிக விசாரணைகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

### கடுமையான காற்றுவீச்சு:

# களுத்துறையின் 600க்கும் மேற்பட்டோருக்கு பாதிப்பு

■ துஷித குமார சில்வா

களுத்துறை மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் (06) பெரும் காற்று வீசியதன் காரணமாக ஏற்பட்ட பாதிப்பால், அப்பகுதிகளில் வசித்த 197 பேர் உள்ளடங்கலாக 618 பேருக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கான நட்டயீட்டுக் கணிப்பொன்றை மேற்கொள்ளுமாறு, பிரதேச செயலாளர் பிரிவின் அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு மாவட்ட செயலாளர் யூ.டி.சி.ஜயலால் அறிவுறுத்தியுள்ளார்.

களுத்துறை மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கான உதவிப் பணிப்பாளர் பிரதீப் பாலகம, இது தொடர்பாக முழுமையான அறிக்கைகொன்றை மாவட்டச் செயலாளருக்கு வழங்கியுள்ளதாகவும், அதன்படி ஆறு வீடுகள் முழுமையாகவும், 187 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

அத்தோடு, பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவில், ஆரம்பப் பாடசாலையொன்றின் நான்கு கட்டடங்களுக்கும், விகாரையொன்றுக்கும், பாதிப்பு ஏற்பட்டுள்ள தெனவும், அவற்றை உடனடியாகச் சீரமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் பணிப்புரை விடுத்துள்ளார்.

# ‘யானையை சஜித்திடம் வழங்குக’



நாட்டின் பலம்பெரும் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியை அழித்துவிடாமல் , மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து கட்சியின் தலைமைத்துவத்தை ஐக்கிய தேசிய கட்சியிடம் கையளிக்குமாறு, ஐக்கிய மக்கள் சக்தியில் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர்,

ஐக்கிய மக்கள் சக்தியைத் தோற்றுவிட்டு சிறிது காலங்களே ஆகும் நிலையிலும் மக்கள் அக்கட்சிக்கு அளித்துள்ள ஆதரவை வரவேற்றுள்ள அவர், அக்கட்சியின் தலைவர், சஜித் பிரேமதாஸவின், நம்பிக்கை கொண்டு 54 நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுத்த மக்களுக்காகக் கடமையாற்றுவோம் என்றார்.

ஐக்கிய தேசிய கட்சியிடமிருந்து விலகியமை தொடர்பாகப் பலரும் வினவினால், தேர்தலில் அதற்கான பதிலை நாட்டு மக்களே வழங்கியுள்ளனர் எனத் தெரிவித்த அவர், ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களைத் தங்களோடு இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

அத்தோடு, ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்துக்கு சஜித் பிரேமதாஸவே பொருத்தமானவர் எனத் தெரிவித்த அவர், அவருக்குத் தலைமைத்துவத்தை வழங்கிவிட்டு ஒன்றித்துப் பயணிப்பதே பொருத்தமானதெனவும் தெரிவித்தார்.

# மொட்டுக் கட்சியின் வெற்றி உலக சாதனை



ஐ.தே.கவின் மறைந்த தலைவர் ஜே.ஆர். ஜெயவர்தனவின் தேர்தல் முறையில் மாற்றம் செய்யாமல் 2/3 பெரும்பான்மையைப் பெறுவது சாத்தியமற்றதென அவர் கூறியிருந்தாரெனத் தெரிவிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, மொட்டுக்கட்சியின் வெற்றி உலக சாதனையாகப் பார்க்கப்பட வேண்டும் என்றார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர்,

ஐக்கிய தேசிய கட்சியின் மறைந்த தலைவர் ஜே.ஆர். ஜெயவர்தன, பிரதமராக இருந்த காலத்தில் தான் ஒரு அரசமைப்பை உருவாக்கியுள்ளதாகவும் அதில் மாற்றம் செய்ய மூன்றிலிரண்டு தனிப்பெரும்பான்மை அவசியம் என்பதால் அந்த அரசமைப்பில் ஒருபோதும் மாற்றம் செய்ய முடியாதெனக் கூறியிருந்தாரெனவும் தெரிவித்தார்.

அதேபோல், அவர் அறிமுகப்படுத்திய தேர்தல் முறைமை இருக்கும் வரையில், எவராலும் 2/3 தனிப்பெரும்பான்மை அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு, அந்த அரசமைப்பில் மாற்றம் செய்வது சாத்தியமற்றதெனக் கூறியிருந்தார் என்றார்.

அவ்வாறிருக்கையில், மொட்டுக் கட்சியின் வெற்றியானது உலக சாதனையென்றே கூற வேண்டுமெனத் தெரிவித்த அவர், எந்தவொரு நாட்டிலும் இதுபோன்ற தேர்தல் முறையை கொண்டு 2/3 பெரும்பான்மையை பெற்றுக்கொள்வது சாத்தியமற்றதெனவும் தெரிவித்தார்.


**விற்பனைக்கு**

திஸ்ஸமஹாராமவிலுள்ள சுற்றுலா விடுதியொன்றுக்கு நல்ல அனுபவமுள்ள ஊழியர்கள் உடனடியாக இணைத்துக்கொள்ளப்படுவர். தங்குமிடத்துடன், 30,000 குறைவில்லாத சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777771885

**தொழில் வாய்ப்பு**

ராஜகிரியவிலுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதியொன்றில், சமையல்கார், சமயலறை உதவியாளர்கள் அவசியம். திறமையான, அனுபவமுள்ள, 20-50 வயதுடையவர்கள், கிராம சேவகர் சான்றிதழுடன் வரவும்.

**பயிற்றுவிப்பு**

அனுபவமுள்ள மற்றும் பாதுகாப்பாகவும் வாகன சாரதிகளை பயிற்றுவிக்கும் பயிற்றுவிப்பாளர்கள் வீட்டுக்கு வருகைத்த தந்து, அல்லது அலுவலகத்துக்கு அழைப்பித்து பயிற்சிகளை பெற்றுத்தருவர். தொடர்புகளுக்கு 0712219198,0763721212

**மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் பொது ஏலத்தில்**

இல.38, நீர்கொழும்பு வீதி, மினுவன்கொடையில் அமைந்திருக்கும் விக்ரமசிங்ஹ அடகு நிலையத்தில் 30/03/2017 ஆம் திகதி முதல் 22/03/2018 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு 2 வருடங்கள் பூர்த்தி அடைந்துள்ளது மற்றும் 14/05/2018 ஆம் திகதி முதல் 28/02/2019 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு வருடம் பூர்த்தி அடைந்து நிலையில் மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் 07/09/2020 ஆம் திகதி காலை 10.00 மணி முதல் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பகிரங்க பொது ஏலத்தில் விற்பனைச் செய்யப்படும்.

டபள்யு.ஏ.ஜே.டி. விக்ரமசிங்ஹ
உரிமையாளர்

மஹிந்த தரப்பின் வெற்றி,

# ‘தமிழீழ சிந்தனையை முற்றாக ஒழிக்கும்’

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவானது, இலங்கையில் இதுவரை ஏற்பட்டிருக்காத கடலளவு மாற்றமென, பிரித்தானியாவின் கொன்செர்வேட்டிவ் கட்சியின் பிரபு லோர்ட் நெஸ்பி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் ஆதாரவாளர்களில் ஒருவரான நெஸ்பி, குறித்த மாற்றத்தை அங்கிகரிக்கும் நபர்களில் ஒருவராகத் தான் இருக்கும் அதேவேளை, பிரித்தானிய அரசாங்கம், பிரித்தானியாவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் வாழும் புலம்பெயர் சமூகங்களும், இதனை அங்கிகரிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர், “இது உண்மையிலேயே சுட்டிக்காட்டத்தக்க தேர்தல் முடிவாகும். உலகில் வேறெங்கும் காணமுடியாத அளவில், இலங்கையின் பிரஜைகள் வாக்களித்துள்ளனர்.

“இதுவே உண்மையாகச் செயற்படக்கூடிய ஜனநாயகம். இந்த முடிவு, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி ஆகியன வரலாற்றில் இணைக்கப்பட்டமையை புலப்படுத்துவதுடன், குறித்த இடங்களுக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியை ஆளும் கட்சியாகவும் சஜித் பிரேமதாஸ எனும் இளம் தலைவரைக் கொண்ட சிறிய எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தியையும் அமர்த்தியிருக்கிறது.

**“ இது இலங்கைக்கான புதிய விடியல். இந்த வாய்ப்பு, இலங்கையை ஒன்றிணைக்கக் கூடிய ஒரு யுகத்தை உருவாக்குவதுடன், தனித் தமிழீழம் எனும் பிரிவினைவாதச் சிந்தனையை முற்றாக ஒழிக்கும்**

“இது இலங்கைக்கான புதிய விடியல். இந்த வாய்ப்பு, இலங்கையை ஒன்றிணைக்கக் கூடிய ஒரு யுகத்தை உருவாக்குவதுடன், தனித் தமிழீழம் எனும் பிரிவினைவாதச் சிந்தனையை முற்றாக ஒழிக்கும்” எனத் தெரிவித்துள்ளார்.

# ‘ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான பயணத்தை ஆரம்பிப்போம்’

ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து பிரிந்துவிட வேண்டும் என்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானத்தை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ஆட்சியைக் கவிழ்க்கும் பயணத்தை ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பிக்கும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பு - களனியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர்,

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், நாட்டு மக்கள், மொட்டுக் கட்சியிலுள்ள சில திறமைசாலிகளுக்கும் வாக்களித்துள்ளனர் என்றும் அந்தத் தெரிவுகளைத் தான் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

மறுதிசையில், ஐக்கிய மக்கள் சக்தியைப் பார்க்கும்போது, ஐ.தே.கவிடமிருந்து பிரிந்து வந்த தீர்மானத்தை அனுமதித்துள்ளனர் என்பதும், தேர்தல் முடிவுகள் மூலம் தெரியவந்துள்ளது என்றார்.

பழைய பிரபலங்களைத் தோற்கடித்துள்ள மக்கள், புதிய முகங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளதால், மக்கள் எதிர்பார்ப்புகளும் புதிய வடிவில் உள்ளதென தெரிவித்த அவர், பில்லியன் கணக்கில் செலவு செய்து மக்களை ஏமாற்ற முயற்சி செய்தவர்களை மக்களை நிராகரித்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு, சில தவறுகளை மக்கள் விட்டுள்ளதால், சில காட்போட் வீரர்கள் தெரிவாகியுள்ளனர் என்றும் இனிவரும் காலங்களில், மக்கள் அந்தக் குறைகளை விடக்கூடாதெனவும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியில், ஐக்கிய மக்கள் சக்தியானது, வலுவான எதிர்க்கட்சியாகச் செயற்படுமெனத் தெரிவித்த பொன்சேகா, கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும், புதிய கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் காலச் செயற்பாடுகளில் விடுத்திருந்த தவறுகளைத் திருத்திகொள்வார் என நம்பிக்கை தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும், காய்ந்த மரமொன்றின் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களை ஐக்கிய மக்கள் சக்திக்குள் உள்வாங்கக் கூடாதென தெரிவித்த அவர், ஐக்கிய தேசிய கட்சியினர், சுயமாக முன்வந்து சிறிகொத்தவை கையளிக்க முயற்சிப்பர் என்றும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சிறிகொத்தவை தருவதாக கூறிக்கொண்டு அதனிலுள்ள பழையவர்கள் ஐக்கிய மக்கள் சக்திக்குள் நுழைவதை தான் ஏற்றுக்கொள்ள போவதில்லை எனத் தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சக்தியிடம் சிறிகொத்தவை கையளிக்காவிட்டால் அந்தக் கட்டத்தை விற்கவே நேரிடும் என்றார்.

**“ சிறிகொத்தவை தருவதாக கூறிக்கொண்டு அதனிலுள்ள பழையவர்கள் ஐக்கிய மக்கள் சக்திக்குள் நுழைவதை தான் ஏற்றுக்கொள்ள போவதில்லை எனத் தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சக்தியிடம் சிறிகொத்தவை கையளிக்காவிட்டால் அந்தக் கட்டத்தை விற்கவே நேரிடும் என்றார்**

# ‘த.தே.கூவின் பின்னடைவை பொறுப்பேற்கிறோம்’

■ எம்.றொசாந்த்



நடந்து முடிந்துள்ள தேர்தலில், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு பொறுப்பேற்பதாக, இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர், தமிழரசுக் கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர், ஏனைய பதவிப் பொறுப்புகள் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் மாநாடும் பொதுக்குழுவுமே, கட்சி யாப்பின்படி தீர்மானங்களை எடுக்கும் என்றும் பொதுவெளியில், பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்குறித்த பதவிப் பொறுப்புகள் தீர்மானிக்கப்படுவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றில், தொடர்ச்சியான இன அழிவுகளையும் சமூக பொருளாதார இழப்புகளையும் அவலங்களையும் தமிழ் மக்கள் சந்தித்துள்ளனர் என்றும் தொடர்ந்து வரும் இந்த அவலங்களுக்கு இதுவரை தீர்வுகள் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலில், த.தே.கூ ஒரு ஜனநாயக வெற்றியைப் பெற்றிருப்பதாகவும் எனினும் கூட்டமைப்பின் பின்னடைவு தொடர்பாக, அதன் தலைமை விரைவில் கூடி ஆராயவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு, தமிழரசுக் கட்சியின் உயர்பீடமும் அடுத்து மத்திய செயற்குழுவும் கூட்டப்பட்டு, தேர்தல் காலத்திலும் தேர்தல் காலத்துக்கு அண்மித்த காலப்பகுதியிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், உறுப்பினர்களின் நடவடிக்கை தொடர்பாக பூரணமாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் அதன்படி நடவடிக்கைக்குழு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

மிகவிரைவில், தேசிய பட்டியல் நியமனம் தொடர்பாக தமிழரசுக் கட்சி உயர்மட்டக் குழுவும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவும் தனித் தனியே ஆராய்ந்து கூட்டாக முடிவை அறிவிக்கவுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# ரயில் மோதி யானை இறப்பு

■ க.அகரன், சுப்ரமணியம் பாஸ்கரன்

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் நேற்று (09) அதிகாலை 5.20 மணியளவில், ரயில் மோதியதில், யானை ஒன்று இறந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அதிவேக ரயில் மோதியே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. அதிர்ஷ்டவசமாகப் பயணிகள் யாருக்கும் எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை.

எனினும், ரயில் மோதியதில் யானை சம்பவ இடத்திலேயே இறந்துள்ளதுடன் யானையின் உடற்பகுதி, ரயில் பெட்டிகளுக்கு இடையில் சிக்கிக் கொண்டதால், ரயில் பயணம் பல மணி நேரம் தடைப்பட்டது.

ஏ9 நெடுஞ்சாலையில் இருந்து 2 கிலோமீற்றர் தொலைவில் காட்டுப் பகுதியில் இவ் விபத்து இடம்பெற்றமையால், பொலிஸாரும் இராணுவத்தினரும் மக்களது பயண ஒழுங்குகளை சீர் செய்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த கனகராயனகுளம் பொலிஸார், வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# காடைக் குஞ்சு பொரிக்கும் இயந்திரம்

## தரம் 6 மாணவனால் கண்டுபிடிப்பு

■ பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில், தரம் 6இல் கல்வி பயிலும் மாணவனான அஸிஸ் முஹமட் இக்றாம் எனும் மாணவன், காடை முட்டைகளை இயந்திரத்தின் ஊடாக குஞ்சு பொரிக்க வைக்கும் செயற்பாட்டில், ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார்.

கொவிட் - 19 நெருக்கடியின்போது கிடைக்கப்பெற்ற விடுமுறை காலத்தைப் பயன்படுத்தியே, மக்களின் பாவனைக்குத் தேவையான இந்த இயந்திரத்தை அவர் கண்டுபிடித்துள்ளார்.

தன்னுடைய தனிப்பட்ட முயற்சியால், மின்சாரத்தின் மூலம், எளிய முறையில் காடைக் குஞ்சு பொரிக்கும் இயந்திரத்தை இவர் கண்டுபிடித்துள்ளார். தன்னுடைய இந்தக் கண்டுபிடிப்புக்கு, தனது பெற்றோர், சகோதரர்கள், நண்பர் ஒருவர் பல உதவிகளைச் செய்து தந்ததாகக் கூறினார்.

இந்த இயந்திரத்தின் மூலம், ஒரே தடவையில் 50க்கும் அதிகமான காடைக் குஞ்சுகளை பொரிக்க வைக்க முடியும் என்றும் எதிர்காலத்தில் பண்ணையொன்றை உருவாக்கி, பலருக்கு தொழில் வாய்ப்பை வழங்கவுள்ளதாகவும் அம்மாணவன் தெரிவித்தார்.





மட்டக்களப்பு மக்களின்

# ‘கூட்டமைப்புக்கான செய்தி’

■ கே.எல்.ரி.யுதாஜித்

வடக்கு, கிழக்கு மக்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஒரு செய்தியைக் கூறியுள்ளனர் என்று தெரிவித்துள்ள கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெட்ணம், த.தே.கூ தன்னைத் திருத்திக்கொள்ளவேண்டும் என்பதே இந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,




மட்டக்களப்பு மாவட்ட மக்கள், இம்முறை தங்களது வாக்குரிமையை நன்றாகப் பயன்படுத்தியுள்ளனர் என்றும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, செயற்றிறனுடன் செயற்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

மூதூர் பிரதேச சபை உறுப்பினர்

# ஜெயசீலன் இராஜினாமா

■ கதிரவன்

திருகோணமலை, மூதூர் பிரதேச சபை உறுப்பினர் புத்திரசிகாமணி ஜெயசீலன், தனது உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமாக் கடிதத்தை, திருகோணமலை பிரதித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்துக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார்.

மூதூர் பிரதேச சபையின் உறுப்பினராக 26 மாதங்கள் இருந்த புத்திசிகாமணி ஜெயசீலன் தான் பதவி விலகுவதாக, திருகோணமலை, சுங்க வீதியிலுள்ள மல்லிகா மண்டபத்தில் நேற்று (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அறிவித்தார்.

கேடயம் சுயேச்சைக் குழு சார்பில் போட்டியிட்ட இவர், தனது சுயேச்சைக் குழு தெரிவித்ததற்கு இணங்க, இரண்டு வருட கால பதவியை ஓர் உறுப்பினருக்கு வழங்கும் பொருட்டு, இப்பதவியை இராஜினாமா செய்துள்ளார்.



கல்முனையில்

# ஒரு வாரம் மின் தடை

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை, கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில், அவசரத் திருத்த வேலை காரணமாக, மின் துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி, இன்று (10) அம்பாறை வீதி, வீரமுனை, வங்கலாவாடி, ஹிஜ்ராபுரம் பகுதிகளில் காலை 08.30 முதல் மாலை 05 மணி வரையும், நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட அட்டப்பலம் பகுதியில் காலை 08.30 மணி முதல் மாலை 04.30 மணி வரையும், மின் தடைப்படும்.

**“ அவசரத் திருத்த வேலை காரணமாக, மின் துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்**

நாளை (11) காரைதீவு, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, கல்முனைக்குடி, தரவைக்கோவில், கடற்கரைப்பள்ளி, அம்மன்கோவில், வி.வி. வீதி, பீச் வீதி, உடையார் வீதி, இஸ்லாமாபாத் வீட்டுத்திட்டம் ஆகிய பகுதியில் காலை 08.30 முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும்.

நாளை மறுதினம் (12) நிந்தவூர் திரையரங்கு வீதி பகுதியில் காலை 08.30 முதல் மாலை 04.30 மணி வரையும் 15ஆம் திகதி, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, நாவிதன்வெளி, அண்ணமலை, சவளக்கடை, வேப்பையடி, சொறிக்கல்முனை, சென்னல்கிராமம், 1, 2 உடங்கா பகுதிகளில் காலை 08.30 முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும்.

17ஆம் திகதி, ஒலுவில் கிராமம், மல்கம்பிட்டி வீதி, ப்லக்து ஈஸ்ட், ப்லக் ஜெ வெஸ்ட், மலையடிகிராமம், கல்லரைச்சல் 01,02,03, கைகாட்டி, நைனாகாடு, சம்மாந்துறை பகுதிகளிலும் 18ஆம் திகதி, காரைதீவு, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, கல்முனைக்குடி, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, நாவிதன்வெளி, அண்ணமலை, சவளக்கடை, வேப்பையடி, சொறிக்கல்முனை, ஆகிய பகுதியில் காலை 08.30 முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படுமென, அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட

# மஞ்சள், ஏலக்காயுடன் ஒருவர் கைதாகினார்

■ ரஸீன் ரஸ்மின்

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட ஒருதொகை மஞ்சள், ஏலக்காய் என்பனவற்றுடன், கற்பிட்டி - ஆணவாசல பகுதியில் வைத்து, நேற்று முன்தினம் (08) கற்பிட்டி கடற்படையினரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கற்பிட்டி கடற்படையின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், குறித்த பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, 20 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய 114 கிலோகிராம் மஞ்சள் கட்டை, 261 கிலோகிராம் ஏலக்காய் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றை விற்பனை செய்யும் நோக்கில், இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் இயந்திரப்படகு மூலம் கொண்டுவரப்பட்டிருப்பதாக, கடற்படையினர் சந்தேகம் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், பறிமுதல் செய்யப்பட்ட மஞ்சள், ஏலக்காய், இயந்திரப்படகுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, கற்பிட்டி கடற்படையினர் தெரிவித்தனர்.

# வெளிநாட்டுப் பறவைகளை வேட்டையாடும் விசமிகள்

■ எம்.றொசாந்த்

சரசாலை குருவிகள் சரணாலயத்துக்கு வரும் வெளிநாட்டுப் பறவைகளை விசமிகள் சிலர் வேட்டையாடி வருவதாக, அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சரசாலை குருவிகள் சரணாலயப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை நாடி, காலை, மாலை வேளைகளில் பெருமளவான பருவகால வெளிநாட்டுப் பறவைகள் வருவது வழக்கம். அவ்வாறு வரும் பறவைகளை சில விசமிகள் வேட்டையாடி வருகின்றனர்.



பறவைகள் மீது வலைகளை வீசி வேட்டையாடி வருவதனால் , தற்போது அப்பகுதிக்கு பறவைகளின் வருகை வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

ஆள் நடமாட்டம் குறைந்த பகுதிகளில் ஒன்றுகூடும் விசமிகள், இவ்வாறு பறவைகளை வேட்டையாடி வருகின்றனர். சில தடவைகள் ஊரவர்கள் வேட்டையாட முற்பட்ட விசமிகளை மடக்கிப் பிடித்து எச்சரித்து விடுவித்த போதிலும் அவர்கள் வேட்டையை நிறுத்தாது சன நடமாட்டம் இல்லாத பகுதிகளில் வேட்டைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பில் அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, இத்தகைய சட்டவிரோத வேட்டையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

லெபனான்

பெய்ரூட் வெடிப்பு தொடர்பான கோபம் வளர்ச்சியடைகையில்

# அரசாங்க அமைச்சுகளுக்குள் நுழைந்த ஆர்பாட்டக்காரர்கள் அலுவலகங்களைச் சேதப்படுத்தினர்



லெபனானியத் தலைநகர் பெய்ரூட்டிலுள்ள அரசாங்க அமைச்சுகளுக்குள் நுழைந்த லெபனானிய ஆர்ப்பாட்டக்காரர்கள், லெபனானிய வங்கிகளின் சங்கத்தின் அலுவலகங்களை நேற்று முன்தினம் சேதப்படுத்தியுள்ளனர்.

கடந்த வார பெய்ரூட் வெடிப்பு தொடர்பிலான கோபாவேசமான ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்து வருகையிலேயே, குறித்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அரசியல்வாதிகள் இராஜினாமா செய்ய வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்ததுடன், கடந்த செவ்வாய்க்கிழமை வெடிப்புக்கு வழிவகுத்த கவனக்குறைவுக்காக தண்டிக்கப்பட வேண்டும் எனக் கூறியிருந்தனர். குறித்த வெடிப்பில் 158 பேர் கொல்லப்பட்டதுடன், 6,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

இந்நிலையில், மேற்கூறப்பட்ட மோதல்களில் பொலிஸ் அதிகாரியொருவர் கொல்லப்பட்டதாக பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார். ஆர்ப்பாட்டக்காரர்களால் துரத்தப்பட்டதைத் தொடர்ந்து அருகிலுள்ள கட்டடமொன்றின் மின்தூக்கி சுழல்தண்டொன்றுக்குள் வீழ்ந்தே பொலிஸ் அதிகாரி இறந்ததாக சம்பவ இடத்திலிருந்த இன்னொரு பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்தில் 117 பேருக்கு காயங்களுக்காக சிகிச்சையளித்ததாகத் தெரிவித்த செஞ்சிலுவைச் சங்கம், இன்னொரு 55 பேர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறியுள்ளது.

வெளிநாட்டமைச்சுக்குள் நுழைந்த டசின் கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள், ஜனாதிபதி மிஷெல் அவோனின் படத்தை எரித்திருந்தனர்.

இந்நிலையில், துப்பாக்கி வேட்டுக்களும், இறப்பர் குண்டுக்களும் பிரயோகிக்கப்பட்டதாக பொலிஸார் உறுதிப்படுத்திய நிலையில் யார் துப்பாக்கிவேட்டுக்களை தீர்த்தது என உடனடியாகத் தெரியவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி டசின் கணக்கான கண்ணீர்ப்புகைக்குண்டுகளை கலகமடக்கும் பொலிஸார் பிரயோகித்த நிலையில், ஆர்ப்பாட்டகாரர்கள் கற்களால் திருப்பித் தாக்கியிருந்தனர்.

இதேவேளை இதிலிருந்து வெளியேறுவதற்கான ஒரே வழி முற்கூட்டிய நாடாளுமன்றத் தேர்தல்கள் என லெபனான் பிரதமர் ஹஸன் டியப் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான்

## தலிபான் சிறைகதிகள் விடுதலைக்கு இணங்கிய ஜனாதிபதி



தலிபான் 400 சிறைக்கைதிகளை விடுவிப்பதை அங்கிகரிப்பதுக்கான தீர்மானமொன்றை ஆப்கானிஸ்தானின் பாரிய சட்டசபையான லொயா ஜிர்கா நிறைவேற்றியதை அடுத்து 400 தலிபான் சிறைக்கைதிகளை விடுவிக்க ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரஃப் கானி இணங்கியுள்ளார்.

மூன்று நாள்கள் லொயா ஜிர்காவின் இறுதியிலேயே குறித்த தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்த சந்திப்பில் பழங்குடியினத் தலைவர்களும், ஏனைய பங்காளர்களும் முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக வழமையாகக் கூடுவது வழக்கமாகும்.

ஆப்கானிஸ்தான் அரசாங்கத்துக்கும், தலிபான்களுக்கு மிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முக்கிய தடைக்கல்லாக சிறைக்கைதிகள் விடுவிப்பு காணப்பட்டிருந்தது. அனைத்து தலிபான் சிறைக்கைதிகளையும் ஆப்கானிஸ்தான் அரசாங்கம் விடுவித்தபோதும் இறுதி 400 பேரை விடுவித்திருக்கவில்லை.

அந்த 400 பேரில் 150க்கும் மேற்பட்டோர் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, பாரிய குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டோர் பலர் காணப்படுகின்றனர்.

ஆப்கானிஸ்தான்



## இஸ்ரேலியப் பிரதமர் நெதன்யாகுவின் இராஜினாமுவுக்காக

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் இராஜினாமாவைக் கோரிய வாரக்கணக்கான ஆர்ப்பாட்டங்களின் தொடர்ச்சியாக அவரின் உத்தியோகபூர்வ வதிவிடத்துக்கு அண்மைய வீதிகளை ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று முன்தினம் நிறைத்திருந்தனர்.

இந்தியா

ஆந்திராவில் கொவிட்–19 சிகிச்சை நிலையமான

## ஹோட்டலில் தீ; 10 பேர் இறந்தனர்



இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தின் விஜயவாடாவில் கொவிட்-19 நிலையமொன்றாகப் பயன்படுத்தப்பட்ட ஹொட்டலொன்றில் பாரிய தீ நேற்றுக் காலையில் பரவியதையடுத்து 10 கொவிட்-19 நோயாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

விபத்து நடந்த நேரம் குறித்த ஹொட்டலில் 30 கொவிட்-19 நோயாளர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

முதலாவது மாடியிலிருந்து ஆரம்பித்ததாக சந்தேகிக்கப்படும் தீயானது முதலில் முதலாம் மாடியிலும் பின்னர் இரண்டாவது மாடியிலும் பரவியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், விபத்து தொடர்பாக ஆந்திரப் பிரதேச அரசாங்கம் விசாரணயொன்றுக்கு உத்தரவிட்டுள்ளது.

குறுஞ்சுற்றொ ன்றாலேயே தீ ஏற்பட்டதாக ஆரம்ப கட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன. நேற்றுக் காலை ஐந்து மணியளவில் தீ ஆரம்பித்த நிலையில் அங்கிருந்த நோயாளர்கள் அச்சப்பட்ட நிலையில் இரண்டு பேர் தங்களது உயிர்களைக் காக்க கட்டடத்திலிருந்து குதித்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியா

ராஜஸ்தானில் இறந்தபடி

## ‘கண்டெடுக்கப்பட்ட பாகிஸ்தான் இந்துக் குடும்பத்தினர்’



இந்தியாவின் ராஜஸ்தானின் ஜோத்பூர் மாவட்டத்திலுள்ள பண்ணையொன்றில், பாகிஸ்தான் இந்து அகதிகள் குடும்பமொன்றின் 11 உறுப்பினர்கள் இறந்தபடி நேற்றுக் காலை கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த குடும்பத்தின் நபரொருவர் அவர்கள் வசிக்கும் டெஷு பகுதியின் லோட்டா கிராமத்திலுள்ள குடிலுக்கு வெளியே உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், நேற்று முன்தினமிரவு இடம்பெற்றதாகக் கூறப்படும் மேற்குறித்த சம்பவம் தொடர்பில் எதுவும் தெரியவில்லை என கிராமத்துக்கான பொலிஸ் மேலாய்வாளர் ராகுல் பர்ஹட் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இறப்புக்கான காரணத்தை தாங்கள் இன்னும் முடிவு செய்யவில்லை எனத் தெரிவித்த ராகுல் பர்ஹட், எனினும் அனைவரும் இரசாயனத்தை உள்ளெடுத்து இறந்திருக்கலாம் என்று ராகுல் பர்ஹட் மேலும் கூறியுள்ளார்.

குடிலில் இரசாயனத்தின் வாசம் காணப்பட்டதாக ராகுல் பர்ஹட் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பாகிஸ்தானைச் சேர்ந்த இந்து அகதிகள் ஆவர். இவர்கள் பிஹில் சமூகத்தவர்கள் ஆவர்.

தென்கொரியா



வெள்ளம், நிலச்சரிவுகளில்

## 30 பேர் உயிரிழந்தனர்; 12 பேரைக் காணவில்லை

**“ 11 மாகாணங்களைச் சேர்ந்த 5,900க்கும் அதிகமானோர், வீட்டை விட்டு வெளியேறியதுடன், 4,600 பேரளவில் தற்காலிக வதிவிடங்களில் தங்கியுள்ளனர்**

தென்கொரியாவில் 46 நாள்கள் கடும் மழையைத் தொடர்ந்து குறைந்தது 30 பேர் இறந்ததுடன், 12 பேரை இன்னும் காணவில்லை.

அந்தவகையில், தென்கொரியாவில் ஏழு ஆண்டுகளில் மிகப்பெரிய மழைப்பருவகாலத்தால் மேலும் மழை, நிலச்சரிவு, வெளியேற்றங்களை நேற்று ஏற்படுத்தியுள்ளது.

தென்கொரிய யொன்ஹப் செய்தி முகவரகத்தின்படி நேற்று வரையில் 6,000 வரையானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர். அந்தவகையில், கொரிய வளைகுடாவின் தென்பகுதியை மழை பயங்கரமாகத் தாக்கி வருகிறது.

இதேவேளை, மத்திய இடர் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான தலைமையத்தை மேற்கோள்காட்டியுள்ள யொன்ஹப் குறைந்தது எட்டுப் பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தென்கொரியத் தலைநகர் சியோலுக்கு 85 கிலோமீற்றர் கிழக்காக சுன்செயோனிலுள்ள உயம் குளத்தில் மூழ்கிய மூன்று கப்பல்களில் மூன்று பேர் இறந்ததுடன் நேற்று மூவரைக் காணவில்லை.

யொன்ஹப்பின் தகவல்படி 11 மாகாணங்களைச் சேர்ந்த 5,900க்கும் அதிகமானோர் அவர்களின் வீட்டை விட்டு வெளியேறியதுடன், 4,600 பேரளவில் தற்காலிக வதிவிடங்களில் எச்சரிக்கையையடுத்து தங்கியுள்ளனர்.

இந்நிலையில், 9,3000 ஹெக்டேயர் பண்ணை நிலம் அழிவடைந்துள்ளது.

உ. அமெரிக்கா




கொவிட்–19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை

## ஐந்து மில்லியனை தாண்டிவிட்டது

**“ உலகளாவிய ரீதியில் கொவிட்–19 தொற்றுக்கு உள்ளானோரின் எண்ணிக்கையானது 20 மில்லியனை நெருங்குவதுடன், கொவிட்–19–ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 727,000ஐத் தாண்டியுள்ளது**

ஐக்கிய அமெரிக்காவில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 8.55 மணி வரையில் 5,014,339ஆகக் காணப்பட்டிருந்ததுடன், கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 162,105ஆகக் காணப்பட்டிருந்தது.

அந்தவகையில், ஐக்கிய அமெரிக்காவில் 66 பேரில் ஒருவர் கொவிட்-19 தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

பிரேஸில் சுகாதாரமைச்சானது கடந்த 24 மணித்தியாலங்களில் 49,970 புதிய கொவிட்-19 தொற்றுக்களையும், 905 புதிய கொவிட்-19-ஆலான உயிரிழப்புகளையும் நேற்று முன்தினம் பதிவுசெய்த நிலையில், அங்கு கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது மூன்று மில்லியனைத் தாண்டியுள்ளதுடன், கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 100,477ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது நேற்றுக் காலை எட்டு மணி வரையில் 64,399-ஆல் அதிகரித்து 2,153,010ஆகக் காணப்படுவதுடன், கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 861-ஆல் உயர்ந்து 43,379ஆகக் காணப்படுகிறது.

ரஷ்யாவானது நேற்றுப் புதிதாக 5,189 கொவிட்-19 தொற்றுக்களை நேற்றுப் பதிவுசெய்த நிலையில் அங்கு கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 887,536ஆக அதிகரித்ததுடன், கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது கடந்த 24 மணித்தியாலங்களில் 77-ஆல் அதிகரித்ததாக அந்நாட்டு கொவிட்-19 செயலணி தெரிவித்த நிலையில் அங்கு கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 14,931-ஆக அதிகரித்துள்ளது.

அந்தவகையில், உலகளாவிய ரீதியில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 20 மில்லியனை நெருங்குவதுடன், கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 727,000ஐத் தாண்டியுள்ளது.

# தேசியபட்டியலும் அரசியல் சுயநலன்களும்...

பொதுத் தேர்தல் வாக்கெடுப்புகள் நிறைவடைந்து, அறுதிப் பெரும்பான்மையுடன் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தையும் அமைத்தாயிற்று. இந்நிலையில், சிறுபான்மைக் கட்சிகள் அமோக வரவேற்புடன் தெரிவுசெய்யப்பட்ட 47 ஆசனங்களையும் 7 தேசியபட்டியலையும் பெற்றுக்கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தி, தன்னுடைய தேசியபட்டியல் பங்கீட்டில் இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

27 இலட்சத்து 71 ஆயிரத்து 980 வாக்குகளைப் பெற்று, அகில இலங்கை ரீதியில் 23.9 சதவீத வாக்குகளுடன் 54 ஆசனங்களைத் தன்வசப்படுத்திக்கொண்ட ஐக்கிய மக்கள் சக்தியால், தன் உள்வீட்டுப் பிரச்சினையைச் சீர்செய்ய முடியாமல் இருப்பது வருத்தத்துக்குரியது.

தேசியபட்டியல் இன்றிய 47 ஆசனங்களில், 20 சிறுபான்மைப் பிரதிநிதிகள் உள்வாக்கப்பட்டிருக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்திமீது சிறுபான்மை மக்கள் வைத்த நம்பிக்கையின் வெளிப்பாடே இது. இதற்கு நன்றிக்கடனாக சஜித் பிரேமதாஸ என்ன செய்யப்போகின்றார் என்று சிறுபான்மை மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கையில், தேசியபட்டியல் விவகாரத்தில்கூட விட்டுக்கொடுப்புக்கு இடமின்றி, இழுத்தடிப்புச் செய்யப்படுவது வேதனைக்குரியது.

ஐக்கிய மக்கள் சக்தியில் சஜித்துக்குப் பக்கபலமாக விளங்கிய தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன 15 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அங்கத்தவர்கள், கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை போன்ற பகுதிகளிலும் கணிசமான வாக்குகளை ஐக்கிய மக்கள் சக்திக்குப் பெற்றுக்கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்றே, முஸ்லிம் கட்சிகளும் தங்கள் பிரதேசங்களில் வாக்குகளைச் சேகரித்திருக்கிறார்கள்.

நிலைமை இப்படியிருக்கையில், ரஞ்சித் மத்தும பண்டார, ஹரின் பெர்ணான்டோ, இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், திஸ்ஸ அத்தநாயக, எரான் விக்கிரமரத்ன, மயந்த திஸாநாயக, தயானி கமகே ஆகியோருக்கு தேசியபட்டியல் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக அறியமுடிகிறது. ஆனால், இந்தத் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென சிறுபான்மைக் கட்சிகள் வேண்டிக்கொண்டுள்ளன. இந்த இழுபறி நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் இறுதிக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சாதகமான பதிலை, சஜித் தரப்பு வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அப்படியொரு சந்தர்ப்பம் சிறுபான்மைக் கட்சிகளுக்கு வழங்கப்பட்டால், தோல்வியுற்ற இடங்களில் சுழற்சி முறையிலான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவது சிறந்தது. குறிப்பாக, கேகாலை, இரத்தினபுரி, கம்பஹா போன்ற பிரதேசங்களைக் கவனத்திற்கொள்ள வேண்டும். இம்மாவட்டங்களில் கணிசமான வாக்குகளைத் தமிழர் பிரதிநிதிகள் பெற்றுக்கொடுத்திருக்கிறார்கள். இவ்வாக்கு வங்கியைத் தக்கவைப்பதற்காகவாவது அப்பிரதேசங்களில் தமிழர் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்த வேண்டும். பிரதிநிதித்துவத்தை இம்மாவட்டங்களில் உறுதிப்படுத்துதல் சிறந்தது.

தமிழ்Mirror
www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD, COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6, 011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER (DIR.) 011 2 479 822, 077 3421 476
CIRCULATION MANAGER (DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER (DIR.) 2 479 626, 2 479 628, 077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk









## வாழ்வியல் தரிசனம்

கணவனும் மனைவியும் மனம் விட்டுப் பேசவேண்டும். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் வேண்டும். பேசும் வார்த்தைகளில் தெளிவும் நம்பிக்கையூட்டலும் இருத்தல் வேண்டும்.

மனம் வேதனைப்படும் வகையிலான சொற்பிரயோகங்கள் அநாகரிகமானவை. திருமணத்துக்கு முன்னர் காதலிப்பதில் தவறில்லை. குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குக் காதல் தடையாக இருக்கக்கூடாது. திருமணத்துக்குப் பின்னர், காதல் ஆழமாகவிட்டால் எதிர்விளைவுகளே ஏற்படும்.

சிலசமயங்களில், துணை குறித்து நெஞ்சத்தில் சலசலப்பு, சலனங்கள், சந்தேகங்களைச் சுமந்தபடி நடிப்பதால், இல்லறம் நல்லறமாகிவிடும் எனக் கருதமுடியாது. ஒருவரைப் பற்றி, இன்னோருவர் சொல்லும் தகவலை, ஆராயாமல் உடன் நம்புவது, இல்லறத்துக்கு விரோதமானது. தம்பதியினருக்கு மத்தியில் 'கரவு' காணப்படுமாயின், அந்த உறவு, ஒருபோதும் சரிப்பட்டுவராது.

அழகு, செல்வம் தேடுபவர்களிடம் உண்மை அன்பு தொடுகலும் இருக்கமுடியாது. தம்பதியினருக்கு இடையிலான காதல் என்பது, உண்மைத் தன்மையிலேயே முகிழ்க்கின்றது. தம்பதியினர் இணைந்து எடுக்கும் தீர்மானங்கள், வாழ்க்கையின் சிருஷ்டி என்பதை உணர்க!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

ராஜபக்ஷ எனும் 'கோலியாத்'தும்

# தமிழ்த் தேசியம் எனும் 'டேவிட்'டும்



என்.கே. அஷோக்பரன்

தேர்தல் முடிந்துவிட்டது; ராஜபக்ஷக்கள் பெரும்பான்மைப் பலத்தோடு நாடாளுமன்றத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள். புதிய கட்சி தொடங்கி, நான்கு வருடங்களில், இலங்கையின் பாரம்பரிய தேசிய கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியையும், இருக்குமிடம் தெரியாமல் செய்து, 'மொட்டுக் கட்சி' என்று விளிக்கப்படும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 145 ஆசனங்களைக் கைப்பற்றி இருக்கிறது.

இதற்கு, மஹிந்த ராஜபக்ஷ என்ற தனிமனித அடையாளமும் கோட்டாபய ராஜபக்ஷவின் 'செயல்வீரர்' என்ற முகமும் பசில் ராஜபக்ஷ என்ற மிகச்சிறந்த அமைப்பாளரின் தலைமைத்துவமும் முக்கியக் காரணங்கள்.

இலங்கையின் அரசியல் கட்சிகள், பொதுஜன பெரமுனவின் இந்த வளர்ச்சியிலிருந்து, கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் நிறைய இருக்கின்றன. குறிப்பாக, கட்சி ஒழுங்கமைப்பு என்று பார்க்கும் போது, இன்று, பொதுஜன பெரமுன அளவுக்கு வினைதிறன் மிக்க ஒழுங்கமைப்பைக் கொண்ட கட்சிகள் எதுவும் இல்லை.

ஒரே இடத்தில் இருந்துகொண்டு, எல்லாத் தேர்தல் வட்டாரங்களையும் நேரடியாகக் கண்காணிக்கும் வினைதிறன் மிக்க கட்சியைக் கட்டமைப்பது, இலகுவானது அல்ல. அதுவும், பொதுஜன பெரமுன கட்சியானது, ராஜபக்ஷக்கள், ஆட்சி அதிகாரம் இழந்திருந்த போது உருவான கட்சி ஆகும்.

அண்மையில், கருத்துரைத்த பசில் ராஜபக்ஷ "பொதுஜன பெரமுன கட்சியை, சீன கொம்யூனிஸ்ட் கட்சியைப் போலவும் இந்தியாவின் பாரதிய ஜனதாக் கட்சியைப் போலவும் கட்டியெழுப்ப விரும்புகிறேன்" எனத் தெரிவித்திருந்தார். இதன் அர்த்தம், சீன கொம்யூனிஸ்ட் கட்சிபோன்று கட்டுக்கோப்பும் கட்டமைப்பும் கொண்டமைந்ததாகவும் பாரதிய ஜனதாக் கட்சி போன்று தேசியவாதக் கொள்கையை முன்னிறுத்தும் கட்சியாகவும் பொதுஜன பெரமுன வளர விரும்புகிறது என்பதாகும்.

சர்வாதிகாரக் கட்டமைப்பைக் கொண்ட இனத்தேசிய-பெருந்திரள்வாதக் கட்சியாக பொதுஜன பெரமுன உருவாகி, இன்று, அதிகாரக் கட்டிலில் திடமாக உட்கார்ந்து கொண்டுள்ளது. இலங்கை அரசியலில், அசைக்க முடியாத சக்திகள் தாம் என்பதை, ராஜபக்ஷக்கள் மீண்டும் நிரூபித்திருக்கிறார்கள்.

பொதுஜன பெரமுன என்ற கட்சி, கட்டியெழுப்பப்பட்ட விடயத்தைச் சுட்டிக்காட்டியதற்கு, இன்னொரு காரணமுண்டு. ராஜபக்ஷக்களின் வெற்றி என்பது, அதிர்ஷ்டம் சார்ந்ததோ, காலச்சூழலின் சாதகத்தால் கிடைத்த வெற்றி என்றோ, குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. மிகத் திறமையாகத் திட்டமிடப்பட்டு, அடையப்பெற்ற வெற்றியாகும். அதிர்ஷ்டமும் காலச்சூழலும் கைகொடுத்திருக்கலாம்; ஆனால், முயற்சி உள்ளவனுக்கு மட்டுமே, அதன் பயனை அறுவடை செய்ய முடியும்.

பொதுஜன பெரமுன பெற்றுக்கொண்ட 145 ஆசனங்களோடு, யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பெற்றுக்கொண்ட ஓர் ஆசனம், டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி பெற்றுக்கொண்ட இரண்டு ஆசனங்கள், தேசிய காங்கிரஸ், முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு ஆகியவற்றின் தலா ஒவ்வோர் ஆசனங்களையும் சேர்த்தால் 150 ஆசனங்களைப் பெற்றுவிடலாம். எதிர்க்கட்சிக்காரர்களை விலைகொடுத்து வாங்க வேண்டிய தேவை இல்லாமல், மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மிக எளிதாகப் பெற்றுக்கொள்ளும் நிலையிலேயே, பொதுஜன பெரமுன இருக்கிறது. இந்தப் பெரும் பலத்துடன், 'கோலியாத்'தைப் போல, பெரும் பலத்துடன் ராஜபக்ஷக்கள் நிற்கிறார்கள்.

தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தவரையில், தமிழ்த் தேசியத்தின் வீழ்ச்சியாக, சிலர் இந்தத் தேர்தல் முடிவுகளைச் சுட்டிக்காட்டுகிறார்கள். இது கவனமாக ஆராயப்பட வேண்டிய விடயம்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஐந்து ஆசனங்களையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன. இம்முறை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மூன்று ஆசனங்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருக்கின்றன.

ஆகவே, தமிழ்த் தேசியம் சார்ந்த ஐந்து ஆசனங்களும் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளுக்கே போயிருக்கின்றன. ஆயினும், ஐந்தில், இரண்டு ஆசனங்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைக் காட்டிலும் தீவிர தேசியம் பேசும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றுக்குக் கிடைத்திருக்கின்றன. இது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தாராளவாத சாய்வின் விளைவாக, ஏற்பட்ட ஆதரவு வீழ்ச்சியா என்றும், சிந்திக்க வேண்டியுள்ளது.

2015ஆம் ஆண்டு தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி பெற்றுக்கொண்ட ஆசனம், இம்முறை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடைத்துள்ளது. வாக்குகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் கூட, ஐ.தே.கக்கும் ஸ்ரீ ல.சு.கக்கும் 2015இல், 12.43% வாக்குகள் கிடைத்திருந்த அதேவேளை, 2020இல் 15.87% வாக்குகள் கிடைத்திருக்கின்றன. இது கணிசமான அதிகரிப்பு என்று கூறக்கூடியதொன்றல்ல. ஆயினும், தமிழ்த் தேசிய கட்சிகள் இந்தச் சமிக்ஞையை உதாசீனம் செய்துவிட முடியாது. அங்கஜன் இராமநாதனின் வெற்றியானது, வடமாகாணத் தமிழர்களுக்கு வாழ்வாதரத் தேவைகளும் இருக்கின்றன என்பதை, தமிழ்த் தேசிய கட்சிகள் மறந்துபோனதை இடித்துரைப்பதாகவே இருக்கின்றது.

கிழக்கைப் பொறுத்தவரையில், 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, திருகோணமலை மாவட்டத்தின் வாக்குவீதத்தில் சிறு வீழ்ச்சியை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சந்தித்திருந்தாலும் ஓர் ஆசனத்தைத் தக்கவைத்திருக்கிறது. மட்டக்களப்பு, திகாமடுல்ல மாவட்டங்களில் தலா ஓர் ஆசனத்தை இழந்துள்ளது. தமிழ்த் தேசிய கட்சிகள், கிழக்கு வாழ் தமிழ் மக்களின் அவர்களுக்கே உரித்தான பிரச்சினைகள் தொடர்பில், அக்கறைகாட்டாததன் விளைவு இது எனலாம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் போட்டியிட்டு, 2018ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பின் போது, ராஜபக்ஷக்கள் தரப்புக்குச் சென்ற வியாழேந்திரன், தமிழ்த் தேசிய பரப்பில் 'துரோகி' என்று முத்திரை குத்தப்பட்டபோதும், ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு, 22, 218 விருப்பு வாக்குகள் பெற்று வெற்றிபெற்றமை, தமிழ்த் தேசிய கட்சிகள், கிழக்கு மாகாணம் சார்ந்து 'out of touch' ஆக இருப்பதைச் சுட்டிக்காட்டி நிற்கிறது.

வன்னியை எடுத்துக்கொண்டால், 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஓர் ஆசனத்தை இழந்துள்ளது. கிட்டத்தட்ட 20,000 வாக்குகளை இழந்துள்ளது. அதில், கிட்டத்தட்ட 17,000 வாக்குகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணிக்கும் கிடைத்திருக்கின்றன. ஆயினும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இழந்த ஆசனத்தை, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி பெற்றுக்கொண்டுள்ளது. ஆகவே, அந்த ஆசனம் நேரடியாக, தமிழ்த் தேசிய கட்சிகளுக்குப் போகாவிட்டாலும், நடைமுறை யதார்த்தத்தில் அது ராஜபக்ஷக்களுக்கு ஆதரவான ஆசனம் என்பதுதான் நிதர்சனம்.

ஒட்டுமொத்தத்தில், இன்று தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தும் கட்சிகளாகக் கருதக்கூடிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் மொத்த நாடாளுமன்றப் பலம் 13 ஆசனங்கள் மட்டுமே. ராஜபக்ஷக்கள் என்ற மாபெரும் 'கோலியாத்'துக்கு முன்னால், 'சின்னப்பெடியனான' 'டேவிட்'டைப் போல, தமிழ்த் தேசியம் நின்று கொண்டிருக்கிறது.

இங்கு, 'டேவிட்'டின் பிரச்சினை, கோலியாத்தைவிடச் சிறியதாகவும் பலமற்றும் இருப்பது மட்டுமல்ல; இருக்கும் பலத்தைக்கூட ஒன்றுபடுத்தி, 'டேவிட்'டால் இயக்க முடியாமல் இருப்பதுதான். த.தே.கூ, த.தே.ம.மு, த.ம.தே.கூ என்று பிரிந்து நிற்கும் தமிழ்த் தேசிய கட்சிகளும் அவற்றின் நட்புசக்திகளாகக் கருதக் கூடிய கட்சிகளும் ஒரு தளத்தில் இயங்கினால் மட்டுமே, 'கோலியாத்'தை எதிர்கொள்ள முடியும் என்பது பற்றி, 'டேவிட்' சிந்திக்க வேண்டும்.

அப்படியானால், இன்னொரு 'கூட்டமைப்பை' உருவாக்குவதா என்று கேட்கலாம். அது நடைமுறைச் சாத்தியமில்லாத விடயம். இந்தக் கட்சிகள் பிரிந்து நிற்பதே, அவர்களால் ஒரு கட்சியாகவோ, கூட்டணியாகவோ இயங்க முடியாது என்பதால்தான். ஆனால், தமிழ் மக்களின் பொதுப்பிரச்சினைகள் சார்ந்து, அவர்கள் ஒன்றுபடுவதற்கான தளமொன்று அவசியம். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களினுடைய 'Parliamentary Caucus' (நாடாளுமன்ற கோகஸ்) ஒன்றைக் கட்டியெழுப்புதல் நல்ல ஆரம்பமாகும்.

அது என்ன, நாடாளுமன்ற 'கோகஸ்'?

அமெரிக்காவின் சட்டவாக்க சபையான அமெரிக்க காங்கிரஸில், சட்டமன்ற நோக்கங்களை முன்னிறுத்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக்கள் 'congressional caucus (காங்கிரஸ் கோகஸ்) எனப்படுகிறது. இதில் கட்சி சார்ந்த குழுக்கள், சித்தாந்தம் சார்ந்த குழுக்கள் எனப் பல குழுக்களுண்டு.

அதுபோலவே, கட்சிகளைக் கடந்து, இனம் சார்ந்த காங்கிரஸ் உறுப்பினர்களின் குழுக்களும் உண்டு. இவை இனக்-கோகஸ்கள் எனப்படுகின்றன. அமெரிக்க காங்கிரஸில் உறுப்பினர்களாகக் கறுப்பினத்தவரை உள்ளடக்கிய கறுப்பின கோகஸ், ஹிஸ்பானிய இனத்தவர்களைக் கொண்டமைந்த ஜனநாயகக் கட்சியின் ஹிஸ்பாகிக் கோகஸ், ஆசிய-அமெரிக்கர்கள், பசுபிக் தீவுகளிலிருந்து வந்த அமெரிக்கர்களைக் கொண்ட ஆசிய பசுபிக்-அமெரிக்க கோகஸ் என்பவை, இங்கு குறிப்பிடத்தக்கது. குறித்த, இன மக்களின் பிரச்சினைகள் தொடர்பில், சட்டவாக்க சபையில் ஒன்றிணைந்து இயங்க, இந்தக் கோகஸ்கள் வழிசமைக்கின்றன.

இதுபோலவேனும், தமிழ் மக்கள் சார்ந்த, தாம் ஒன்றுபடக்கூடிய அடிப்படை விடயங்களிலேனும் நாடாளுமன்றத்தில் ஒரு 'கோகஸ்' ஆகச் செயற்பட முடியுமானால், அது 'கோலியாத்'தை எதிர்கொள்வதில் 'டேவிட்'டின் முதல் வெற்றியாக அமையும். இந்த முதல் வெற்றியாவது, அடையப்பெறுமா என்பதுதான், தொக்கி நிற்கும் கேள்வியாகும்.

## கடிதங்கள்

### ஓட்டமாவடி அஞ்சலகத்தில் பல குறைபாடுகள்

மட்டக்களப்பு, ஓட்டமாவடி அஞ்சல் அலுவலகத்தில் பல்வேறு குறைபாடுகள் நிலவிவருவதாக, பொதுமக்களும் தபாலக அலுவலர்களும் விசனம் தெரிவிக்கிறார்கள்.

வாழைச்சேனையையும் ஓட்டமாவடியையும் இணைக்கும் பிரதான வீதியில் அமையப்பெற்றிருக்கும் இந்த அஞ்சலகத்தை, மக்கள் அதிகளவில் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

ஓட்டமாவடி அஞ்சலகம் வகை 01ஐச் சேர்ந்ததாகும். இருந்தபோதிலும், தபாலதிபர் ஒருவரும் இரண்டு உதவித் தபாலதிபர்களுமே பணியாற்றி வருகின்றனர். ஆனால், நான்கு உதவித் தபாலதிபர்கள் தேவைப்படுவதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன், ஓட்டமாவடி பிரதான அஞ்சலகத்தில் இருந்து, மீராவோடை, மாஞ்சோலை, புணானை ஆகிய உபஅஞ்சலகங்களுக்கு, பொதிகள், கடிதங்களை விநியோகிப்பதற்கு ஓர் அலுவலரும் கடிதங்களை விநியோகம் செய்வதிலுள்ள தாமங்களைத் தவிர்ப்பதற்கு இரண்டு தபால்க்காரர்களும் தபாலைத் தரம் பிரிக்கும் அலுவலர் ஒருவரும் இரவு நேரக் காவலாளி ஒருவரும் சுத்திகரிப்பாளர் ஒருவரும் என ஆளணியினர் நியமிக்கப்படும்போதுதான், மேற்குறிப்பிட்ட தபாலகத்தின் பணிகளைச் சீராக முன்னெடுத்துச் செல்லமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், தபாலகத்தின் ஓடுகள் சேதமைந்து காணப்படுவதால், அந்த ஓடுகளும் மாற்றப்பட வேண்டும் என்றும் உரிய அதிகாரிகளிடத்தில் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

–பாயிஸ் நஷீர்

# பொருளாதார மீட்சி

## கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரதான தொழிற்றுறைகள்

ச. சேகர்

கொவிட்-19 தொற்றுப் பரவலைத் தொடர்ந்து, பொருளாதாரத்தை மீட்சியடையச் செய்வதற்காகத் தொழிற்றுறைகளின் வளர்ச்சியை ஊக்குவித்து, தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான தேவை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. எவ்வாறாயினும், இவ்வாறான கொள்கைகள் வகுக்கப்படுவதனூடாக மாத்திரம், இலங்கைக்கு முன்னேற்றம் பதிவாகிவிடாது. மாறாக, உள்நாட்டு நிறுவனங்களை ஏற்றுமதிச் செயற்பாடுகளில் ஈடுபட ஊக்குவித்து, சர்வதேச பெறுமதிச் சங்கிலிகளுடன் இணைப்பதற்கு வழியேற்படுத்துவது அவசியமானதாகும்.

இவ்வாறான பெறுமதிச் சங்கிலிகளுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு, கொவிட்-19 வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், புதிய வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு, இலங்கை தனது வசதி வாய்ப்புகளை மேம்படுத்த வேண்டியுள்ளதுடன், போட்டிகரமானதாகத் திகழ்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறான சூழ்நிலையில், இலங்கையின் வளர்ச்சி வாய்ப்பை மேம்படுத்திக் கொள்வதற்கு, போட்டிகரத்தன்மையை மேம்படுத்துவது, தேசியக் கொள்கைகளின் தொடர்ச்சித் தன்மையை உறுதி செய்வது அடங்கலான, பரிபூரண தேசிய தொழிற்றுறைக் கொள்கை ஒன்றைச் செயற்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

அபிவிருத்திச் செயன்முறையின் ஆரம்பத்திலேயே, தொழிற்றுறைசார் கொள்கைகளை வெற்றிகரமாகச் செயற்படுத்தியிருந்ததனூடாக, ஹொங்கொங், சீனா, தென்கொரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள், தமது நாட்டுப் பொருளாதாரங்களைத் துரிதமாக மேம்படுத்தி, தொழிற்றுறைக்கு உயர் பெறுமதியைச் சேர்த்திருந்ததுடன், உயர்மட்ட அபிவிருத்தியை நோக்கி நகர்ந்திருந்தன. எவ்வாறாயினும், இலங்கையில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்டிருந்த தொழிற்றுறைசார் கொள்கைத் திட்டங்களினூடாக, நேர்த்தியான, நிலைபேறான பெறுபேறுகள் நாட்டுக்கு கிடைக்கவில்லை. இதில் அவ்வாறான திட்டங்களினூடாக அனுகூலங்கள் கிடைப்பதற்கு முன்னதாகவே, அவை கைவிடப்பட்டிருந்தமை அல்லது அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தமையைக் குறிப்பிட முடியும்.



இலங்கையின் தொழிற்றுறைசார் செயற்பாடுகள் நான்கு உபதுறைகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டுள்ளன. நிர்மாணம், அகழ்வு, சுரங்கப்பணி, உணவு பானங்கள், புகையிலை உற்பத்தி, ஆடைகள், ஆடைத் தொழிற்றுறை, தோற்பொருள்கள் உற்பத்தி போன்றன அவையாகும். எவ்வாறாயினும், இவ்வாறான உற்பத்திப் பொருள்களின் பெருமளவானவை உள்நாட்டுச் சந்தையில் பயன்படுத்தப்படுகின்றன. சில ஆடை உற்பத்திகள், நுகர்வோர் பொருள்கள் மாத்திரமே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தேயிலை, இறப்பர், ஆடைத் தொழிற்றுறை போன்றவற்றைச் சேர்ந்த இலங்கையின் சில உற்பத்தியாளர்கள் சர்வதேச தரச் சான்றிதழ்களைப் பெற்று, தமது வியாபாரச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். வணிகச்சரக்கு ஏற்றுமதியில் குறைந்தளவு செயற்பாடுகளின் காரணமாக, ஆசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கை தற்போதும் பின்தங்கிய நிலையிலுள்ளது. தொழிற்றுறைசார் உற்பத்தி, தொழிற்றுறைசார் ஏற்றுமதி போன்றவற்றில் குறைந்தளவு பன்முகப்படுத்தல் காரணமாக, உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் உற்பத்தித் துறையில் குறைந்தளவு முன்னேற்றத்தைப் பதிவு செய்ய முடிந்துள்ளது. மூலதனப் பொருள்கள் போன்ற தொழிற்றுறைகள் பெருமளவில் ஈடுபாட்டற்றதாக அமைந்துள்ளன.

எவ்வாறாயினும், போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் இலங்கை, தனது குறைந்த செலவிலமைந்த தொழிலாளர் அனுகூலத்தை, படிப்படியாக இழந்த வண்ணமுள்ளது. தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்ட பொருள்கள் என்பதிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட,



தொழில்நுட்ப ரீதியில் முன்னெடுக்கப்படும் தயாரிப்புகள் துறையாக உள்நாட்டு ஏற்றுமதித் துறையை மாற்றியமைப்பது தொடர்பில் நாடு கவனம் செலுத்த வேண்டும்.

ஒருசீரான தொழிற்றுறைசார் அபிவிருத்தி மூலோபாயமொன்றுக்கான தேவையை இவை உணர்த்துகின்றன. வியாபாரங்களுக்கு ஊக்கமளிக்கும், முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிக்கும், சந்தை மறுசீரமைப்புகளை மேற்கொள்ளக்கூடிய விடயங்களும் முன்னெடுக்கப்படுவதனூடாக இனங்காணப்பட்ட தொழிற்றுறைகளில் காணப்படும் வாய்ப்புகளை நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். பல நாடுகளில், உயர் பெறுமதி சேர்ப்பு, ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கு காணப்படும் வாய்ப்புகள், தொழில் வாய்ப்புகள், வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கக்கூடிய விடயங்களை கவனத்தில் கொண்டு, தமது தொழிற்றுறைகளை முன்னுரிமை அடிப்படையில் வகைப்படுத்தி அவற்றை ஊக்குவித்த வண்ணமுள்ளன. தேசிய தொழிற்றுறைக் கொள்கையில் இந்த விடயங்கள் தீர்க்கப்பட்டு, சகல பங்காளர்களுடனும் இணைந்து தொழிற்றுறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கமைய தொடர்ச்சியாக இவை அமல்ப்படுத்தப்பட வேண்டும். தேர்தல் தற்போது முடிவடைந்து புதிய நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டுள்ளமையால், இது போன்ற தொழிற்றுறைசார் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். நீண்ட காலத்துக்கு அவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தாமல், முறையாகச் செயற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான வழிமுறைகள், ஊக்குவிப்புகள், வழிகாட்டல்கள் எதுவுமின்றி வெறுமனே, சகல நுகர்வுப் பொருள்களையும் உள்நாட்டில் உற்பத்தி செய்யுமாறு உயர்மட்டத்திலிருந்து எழும் அழுத்தங்களால், இலங்கை முகங்கொடுத்துள்ள பொருளாதாரச் சவால்களுக்குத் தீர்வைக் கண்டுவிட முடியாது. குறிப்பாக, நாடு பாரிய கடன் சுமையைக் கொண்டுள்ளது. நாட்டின் பொருளாதார மீட்சிக்கான எதிர்காலம் என்பது, ஏற்றுமதி, புதிய முதலீடுகள் போன்றவற்றில் பெருமளவில் தங்கியுள்ளது.

குண்டர்களையும், மோசடிக்காரர்களையும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு துணை போவோருக்கும் நாட்டின் அபிவிருத்தியில் ஏதேனும் வகையில் பங்களிப்பு வழங்கக்கூடிய வகையில் பொறுப்புமிக்க பதவிகளில் நியமிப்பது, நாட்டை மேலும் மோசமான நிலைக்குக் கொண்டு செல்லும்.

### கொவிட்–19க்கு முகம் கொடுக்கக்கூடிய

## வியாபாரத்தை விருத்தி செய்வதற்கான திறன்கள்

கே.எல்.ரி. யுதாஜித்

சுற்றுலாத்துறையில் திறன்களை அபிவிருத்தி செய்யும் வகையில், அவுஸ்திரேலியா அரசாங்கத்தின் நிதியில் செயற்படுத்தப்படும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக உள்வாங்கப்பட்ட, வளர்ச்சிக்கான தேர்ச்சித் திட்டத்தின் கீழ், அம்பாறை மாவட்டத்தின் எதிர்வரும் 3 வருடங்களுக்கான மூலோபாயத்திட்டத்தின் வெளியீட்டு நிகழ்வு, அண்மையில் அம்பாறை ரண்பிம விடுதியில் நடைபெற்றது.



உள்வாங்கப்பட்ட வளர்ச்சிக்கான திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் சுற்றுலா, விருந்தோம்பல் துறையின் அபிவிருத்திக்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், 2023ஆம் ஆண்டு வரையில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டங்களை உள்ளடக்கியதான இத்திட்டத்தின் வெளியீட்டு நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல். பண்டாரநாயக்கவும் சிறப்பு அதிதியாக மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன், மாவட்டத்திட்டமிடல் செயலகத்தின் உதவித்திட்டமிடல் பணிப்பாளர், அரச, தனியார் சுற்றுலாத்துறை பங்குதாரர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். நிகழ்வில், உள்வாங்கப்பட்ட வளர்ச்சிக்கான திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அம்பாறை மாவட்ட முகாமையாளர் யு.எல்.சம்சுதீன், திட்டத்தின் மூலோபாயப் பிரிவு பணிப்பாளர் ஆர்.ரசுராமமூர்த்தி, முகாமையாளர் திருமதி சரண்யா ரவிக்குமார் உள்ளிட்டோரும் பங்கு கொண்டு விளக்கங்களை வழங்கினர்.

இத்திட்டத்தில், சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான திறன்களை விருத்தி செய்வதன் மூலம், புதிய திறன்களை உருவாக்குதல், புதிய திறன்கள் உள்ள மனித வளத்தை உருவாக்குதல், தொழில்வாய்ப்புகளை உருவாக்குதல், சுற்றுலாத்துறைக்குத் தேவையான புதிய திறன்களை விருத்திப் பயிற்சிநெறிகளை உருவாக்குதல், பெண்கள், மாற்றுத்திறனாளிகளை சுற்றுலாத்துறையில் இணைப்பதற்கு ஊக்குவித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

அதேநேரத்தில், தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய பயிற்சி நெறிகளை வழங்குதல், கொவிட்-19க்கு முகம் கொடுக்கக்கூடிய வியாபாரத்தை விருத்தி செய்வதற்கான திறன்களை விருத்தி செய்தல், சுற்றுலாத் தளங்கள் பற்றிய விவரங்களை வெளியிடங்களுக்குத் தெரியப்படுத்துதல், அது பற்றிய தகவல்களை உருவாக்குவதற்கான திறன்களை விருத்தி செய்தல், சுற்றுலாத்துறைக்குத் தேவையான திறன்களை இனங்கண்டு விருத்தி செய்து, அவற்றை மாவட்ட மட்டத் திட்டமிடல் செயற்பாடுகளுடன் ஒருங்கிணைத்தல், அரச, தனியார் சுற்றுலாத்துறை பங்குதாரர்களை ஒருங்கிணைக்கத் தேவையான திறன்களை விருத்தி செய்தல் ஆகியவை மூலம், புதிய மாதிரிகளை உருவாக்கி தேசிய ரீதியாக அமல்படுத்துவதற்கு அமைச்சுக்கு பரிந்துரை செய்தல் நடைபெறும்.

உள்வாங்கப்பட்ட வளர்ச்சிக்கான திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பொலநறுவை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வறிய நிலையிலுள்ள ஆண்கள், பெண்கள், வலது குறைந்தோரைத் தொழிலாளர்களாக, உற்பத்தியாளர்களாக, முயற்சியாண்மையாளர்களாக சுற்றுலாத்துறையில் உள்வாங்குவதை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படுகிறது.

## யூனியன் அஷ்யூரன்சின் மாற்றுச் செயற்பாட்டு முறைகள்

உலகளாவிய ரீதியில் வியாபாரச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் கொவிட்-19 தொற்றுப் பரவல் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், பெரும்பாலும் சகல துறைகளும் சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளன.

நிதிச்சூழலில், ஊழியர்களைப் பாதுகாப்பாகப் பேணவும், வாடிக்கையாளர்களுக்கு வழமையான சேவைகளைப் புதிய வழிமுறைகளைப் பின்பற்றி வழங்குவதை உறுதி செய்ய வேண்டியிருந்தது. ஊழியர்கள், வாடிக்கையாளர்களின் நலன்களைப் பேணுவதில், தனது செயற்பாடுகளை முடக்க நிலை அமலிலிருந்த காலப்பகுதியில், சிறந்த வகையில் முன்னெடுத்திருந்தது என்பதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

இலங்கையின் மாபெரும் ஆயுள் காப்புறுதிச் சேவை வழங்குநர் என்பதுடன், ஜோன் கீல்ஸ் குரூப்பின் பின்புலத்தில் இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், தொற்றுப் பரவல் காரணமாக எழுந்த சவால் நிலைகளுக்கு முகங்கொடுப்பதில் தனது நவீன தொழில்நுட்பம், பரிபூரண வாடிக்கையாளர் சென்றடைவு நிகழ்ச்சிகள், ஊழியர்கள், வாடிக்கையாளர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டங்களினூடாக பணியாற்றும் மாற்றியமைக்கப்பட்ட பணியாற்றல் சூழல் ஏற்பாடுகளையும் முன்னெடுத்திருந்தது.

பணியாற்றும் சூழலை மாற்றியமைத்துக் கொள்ள முடியாமை எனும் பிரச்சினைக்குப் பெருமளவான நிறுவனங்கள் முகங்கொடுத்திருந்தன.



யூனியன் அஷ்யூரன்சின் வியாபாரத் தொடர்ச்சித் திட்டம் என்பது, ஊழியர்களுக்கு வீடுகளிலிருந்தவாறு பணியாற்றுவதற்கு வசதியை ஏற்படுத்தியதுடன், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி, பணியாற்றும் சூழலை மாற்றியமைத்துக் கொண்ட ஒரு சில நிறுவனங்களில் ஒன்றாக யூனியன் அஷ்யூரன்ஸைத் திகழச் செய்தது. ஒன்லைனில் சந்திப்புகள், பயிற்சிகள் போன்றவற்றை முன்னெடுப்பதற்கு மாற்று முகாமைத்துவ செயன்முறைகள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன், வெளியக சூழலால் எழக்கூடிய தடங்கல்களைத் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாகவும் அமைந்திருந்தது.

சூழலில் நிலவிய உறுதியற்ற நிலை காரணமாக, டிஜிட்டல் மாற்றியமைப்புச் செயன்முறையைத் துரிதமாகப் பின்பற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது.

நீண்ட கால வளர்ச்சி வாய்ப்புகளை வெளிக்கொணரும் வகையிலும், முகவர், வாடிக்கையாளர்கள் மத்தியில் செயற்பாட்டு மாற்றத்தை ஊக்குவிக்கும் வகையிலும் வர்த்தக செயற்பாடுகளைத் தன்னியக்க மயப்படுத்தும் நடவடிக்கைகளை யூனியன் அஷ்யூரன்ஸ் மேற்கொண்ட வண்ணமிருந்தது. விற்பனைச் செயன்முறைகளுக்கு வினைதிறனைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய அனுகூலங்கள், வெகுமதிகள் ஆகியன ஒன்றிணைக்கப்பட்ட டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாடுகள் இதில் ஒன்றாகும்.

ஏனைய செயற்பாடுகளில் விற்பனை நடவடிக்கைகளை ஊக்குவித்தல், ஊழியர் செயற்பாடுகள், வருமானமீட்டல் செயற்பாடுகள் ஆகியவற்றை டிஜிட்டல் கட்டமைப்புகளினூடாக ஊக்குவித்தல், பயிற்சி இடைவெளிகளை நிவர்த்தி செய்தல், ஒட்டுமொத்த வினைதிறனைக் கண்காணித்தல், விற்பனைச் செயலணிக்கு வாடிக்கையாளர் ஈடுபாடு தொடர்பான பரிபூரண பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்றன இதில் அடங்கியுள்ளன.



# ஸ்ருதியின் 'எட்ஜ்'


நடிகை ஸ்ருதிஹாசன், ஊரடங்கு காலத்தில் அல்பம் உருவாக்கும் வேலைகளில் தீவிரமாக உள்ளார். அடுத்தாண்டில், 'எட்ஜ்' என்ற அல்பத்தை வெளியிட உள்ளார்.

அதன் ஓர் அங்கமாக, அதிலிருக்கும் ஒரு பாடலை வெளியிட்டுள்ளார். மறைத்து வைக்கப்பட்ட உங்கள் உணர்வுகளின் ஓரத்தை, இப்பாடல் சொல்லும்.

இதுகுறித்து ஸ்ருதி கூறுகையில், "இசை என் வாழ்வின் ஓர் அங்கம். அதைப் பகிர்வதை அதிர்ஷ்டமாக உணர்கிறேன். 'எட்ஜ்' உங்களுக்குள் இருக்கும் குழப்பத்தையும் சீரற்ற உங்கள் அன்பான பகுதிகளையும், வெளிக்கொண்டுவரும் ஒரு முயற்சி.

"மற்றவர்களிடம் நீங்கள் சிறந்ததை எதிர்பார்ப்பதை நிறுத்தும்போது, உங்களை நீங்கள் உண்மையாகக் கொள்ளும் பயணமாக இது இருக்கும்" எனத் தெரிவித்துள்ளார்.

கரண் பாரிக் இணைந்து தயாரித்துள்ள 'எட்ஜ்'இல் ஸ்ருதி பல்வேறு பொறுப்புகளை ஏற்றுள்ளார். பாடலை எழுதிப் பாடியது மட்டுமன்றி, இப்பாடலைப் பதிவு செய்து, இயக்குநரும் எடிட்டருமான சித்தி படேலுடன் இணைந்து, இப்பாடலுக்கான வீடியோவை ஊரடங்கு காலத்தில் படமாக்கியுள்ளார்.





# ராணாவுக்கு டும்...டும்...டும்

நடிகர் ராணா - மிஹகா பஜாஜ் ஆகியோர், திருமணம் ஐதராபாத்தில் உள்ள ராமா நாயுடு ஸ்டுடியோவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. திருமணத்துக்கு மிக நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் எனக் குறைந்தளவில் தான் கலந்து கொண்டனர்.

தெலுங்குத் திரையுலகத்தில் இருந்து, ராம்சரண் - அவரது மனைவி உபாசானா, அல்லு அர்ஜுன் ஆகியோர் மட்டுமே நேரடியாகக் கலந்துகொண்டு வாழ்த்தியுள்ளார்கள்.

நடிகர் நாக சைதன்யா, சமந்தா ஆகியோர், ராணாவின் மிக நெருங்கிய உறவினர்கள் என்பதால், அவர்களும் கலந்துகொண்டனர். மகேஷ்பாபு, நானி உள்ளிட்ட பல தெலுங்கு நடிகர்கள், சமூக வலைத்தளங்களில் வாழ்த்தியுள்ளார்கள்.

மேலும் பல நடிகர்கள், நடிகைகள், புதுமணத் தம்பதியினரை சமூக வலைத்தளங்களில் வாழ்த்தியுள்ளார்கள். திருமண விழாவை, யூடியூப் மூலமாக விஆர் தொழில்நுட்பத்தில் ஒளிபரப்புச் செய்துள்ளனர். அதை, பிரபலங்கள் பலரும் வீட்டிலிருந்தே பார்த்து இரசித்து, மணமக்களை வாழ்த்தியுள்ளனர். திருமணத்தில் 50 பேர் மட்டுமே கலந்து கொண்டுள்ளனர். கொரானோ ஒழிந்தபின், திருமண வரவேற்பு நடக்க வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.



# ஜோதிகாவின் தாராளம்

நடிகை ஜோதிகா, சில மாதங்களுக்கு முன்பு படப்பிடிப்புக்காக தஞ்சாவூர் சென்றிருந்தபோது, படப்பிடிப்பு நடந்த அரசு ராசா மிராசுதார் வைத்தியசாலையைப் பார்வையிட்டுள்ளார். அங்கு சில அடிப்படை வசதிகள்கூட சரியாக இல்லாமல் இருந்தது.

அது தொடர்பாக நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ஜோதிகா, "நான் தஞ்சாவூருக்கு சென்றபோது, அங்குள்ள தஞ்சை பெரிய கோவிலுக்குச் செல்லவில்லை. கோவிலுக்கு செலவுசெய்யும் பணத்தை வைத்தியசாலைக்குச் செலவு செய்யுங்கள்" என்று கூறியதோடு, ராசா மிராசுதார் வைத்தியசாலைக்கு, 25 இலட்ச ரூபாய் நிதியுதவி வழங்கியிருக்கிறார்.

அத்துடன், குழந்தைகளைக் காப்பதற்கான மருத்துவ உபகரணங்களை வாங்கிக் கொடுத்தும் குழந்தைகள் விடுதிகளுக்கான சீரமைப்புக்கான தொகையையுமே, அவர் வழங்கியுள்ளார்.

எவ்வாறெனினும், ஜோதிகாவின் பேச்சு சர்ச்சையாகியுள்ளது.

# ரஜினியை முந்திய பிரபாஸ்

தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில், தமிழ் சினிமா நடிகரான ரஜினிகாந்த் தான் அதிக சம்பளம் வாங்குகிறார் என்று இதுவரை சொல்லிவந்தார்கள். ரஜினிகாந்த், அதிகபட்சமாக 600 - 700 மில்லியன் இந்திய ரூபாய்களை வாங்குவதாகத்தான் தகவல். ஆனால், மாஸ்டர் திரைப்படத்தில், விஜயின் சம்பளம் 800 மில்லியன் இந்திய ரூபாய் என்று சொல்லப்பட்டது. இருப்பினும், அது உறுதியில்லை.

இதனிடையே, பாகுபலி நடிகரான பிரபாஸ், மகாநதி இயக்குநர் நாக் அஸ்வின் இயக்கத்தில் நடிக்க உள்ள 21ஆவது திரைப்படத்துக்கு, 700 மில்லியன் இந்திய ரூபாய் வரை சம்பளமாகக் கேட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

தவிர, தென்னிந்திய மொழிகளில் படத்தை டப்பிங் செய்து விற்கும் உரிமையிலும் அவருக்குப் பாதி கொடுத்துவிட வேண்டுமாம். கூட்டிக் கழித்துப் பார்த்தால், 1000 மில்லியனைத் தாண்டும் என்கிறார்கள்.



சம்பியன்ஸ் லீக்: காலிறுதியில்

# பார்சிலோனா, பயேர்ண் மியூனிச்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு, ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவும், ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சும் தகுதிபெற்றுள்ளன.

இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் 4-2 என்ற மொத்த கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலியை வீழ்த்தி பார்சிலோனாவும், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியை 7-1 என்ற மொத்த கோல் கணக்கில் வீழ்த்தி பயேர்ண் மியூனிச்சும் காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றிருந்தன.

நாப்போலியின் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடித்திருந்த பார்சிலோனா, தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியை 3-1 என்ற கோல் கணக்கில் வென்றிருந்தது. பார்சிலோனா சார்பாக கிளமென்ட் லெங்லெட், லியனல் மெஸ்ஸி, லூயிஸ் சுவாரஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். நாப்போலி சார்பாகப் பெற்ற கோலை லொரென்ஸோ இன்சீனியா பெற்றிருந்தார்.

இதேவேளை, செல்சியின் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியை 3-0 என்ற கோல் கணக்கில் வென்றிருந்த பயேர்ண் மியூனிச், தமது மைதனத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் வென்றிருந்தது. பயேர்ண் மியூனிச் சார்பாக, றொபேர்ட் லெவன்டோஸ்கி இரண்டு கோல்களையும், இவான் பெரிசிச், கொரென்டின் டொலிஸோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர். செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை தம்மி ஏப்ரஹாம் பெற்றிருந்தார்.




# 'கிறிஸ் வோக்ஸ் அதிசிறப்பானவர்'



இங்கிலாந்தின் சகலதுறைவீரர் கிறிஸ் வோக்ஸ் அதிசிறப்பானவர் என இங்கிலாந்தின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவர் ஜோ றூட் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், மன்செஸ்டரில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினமிரவு முடிவுக்கு வந்த முதலாவது டெஸ்டில் கிறிஸ் வோக்ஸ், ஜொஸ் பட்லரின் இணைப்பாட்டம் காரணமாக இங்கிலாந்து வென்ற நிலையிலேயே குறித்த கருத்தை ஜோ றூட் வெளிப்படுத்தியுள்ளார்.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், ஜொஃப்ரா ஆர்ச்சர் (3), ஸ்டூவர்ட் ப்றோட் (3), கிறிஸ் வோக்ஸிடம் (2) குறிப்பிட்ட இடைவேளைகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்தபோதும் ஷண் மசூட்டின் 156, பாபர் அஸாமின் 69, ஷடாப் கானின் 45 ஓட்டங்கள் காரணமாக தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 326 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து சார்பாக ஒலி போப் 62, ஜொஸ் பட்லர் 38, ஸ்டூவர்ட் ப்றோட் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களைப் பெற்று, சகல விக்கெட்டுகளையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், சகல விக்கெட்டுகளையும் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்து இங்கிலாந்து அணி, வெற்றியிலக்கையடைந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 10 ஓகஸ்ட் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

AUGUST 10, 2020
MONDAY
VOL: 006/069
RS. 10.00
UPCOUNTRY ★★

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk



## ‘எனக்குக் கிடைத்த வாய்ப்பை தாழ்மையுடன் ஏற்கிறேன்’

மக்களுக்கு மீண்டும் சேவை செய்ய, தனக்குக் கிடைத்த வாய்ப்பைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையர்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கை, எனது தேசத்துக்குத் தொடர்ந்து சேவையைச் செய்யத் தூண்டுகிறது என்றார்.

தொடர்ச்சி P2

### அரசியலில் இருந்து

# ‘ஓய்வு பெறுகிறேன்’

**மலையக மக்கள் முன்னணியின் மாநாடு கூட்டப்படும்; இளைஞர்களுக்கு வாய்ப்பு**

**த.மு.கூட்டணிக்கு தேசிய பட்டியல் வழங்கப்படாவிட்டால், நிச்சயம் மாற்று நடவடிக்கை**



எஸ்.கணேசன்

இதுதான் தனது இறுதித் தேர்தல் எனத் தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே.இராதாகிருஷ்ணன், இனி, தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு, தேசிய பட்டியல் வழங்கப்படாவிட்டால், நிச்சயம் மாற்று நடவடிக்கையில் இறங்கவுள்ளதாகவும், அவர் எச்சரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2




### சுபநேரத்தில் மஹிந்த ராஜபக்ஷ

## பிரதமராகப் பதவியேற்றார்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில், குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு, ஆகக்கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையின் 28ஆவது பிரதமராக, நேற்று (09) பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

தொடர்ச்சி P2

### அமர்வுகளில் பிரேமலால் ஜயசேகர கலந்துகொள்ள

## ‘நீதிமன்ற அனுமதி பெறவேண்டும்’

**சட்டத்தரணிகள் தெரிவிப்பு**

ஏ.ஏ.எம்.பாயிஸ்



மரணதண்டனை விதிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் பிரேமலால் ஜயசேகர, பொதுத் தேர்தலில் அதிக வாக்குகளால் வெற்றி பெற்றுள்ள நிலையில், நாடாளுமன்ற அமர்வுகளில் அவர் கலந்துகொள்ள வேண்டுமாயின், அவர் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசேட அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும் என, சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## மறுத்தார் சமல்

புதிய நாடாளுமன்றத்தில், சபாநாயகர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு, முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, தனிப்பட்ட ரீதியில் விடுத்த கோரிக்கையை, சமல் ராஜபக்ஷ மறுத்துவிட்டாரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

### நுவரெலியா மாவட்டத்தில்

## கடும் மழை

துவாரக்ஷன், செ.தி.பெருமாள், பி.கேதீஸ்



மலையகத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையுடன்கூடிய வானிலை காரணமாக, பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

இந்நிலையில், நானு-ஓயாவில் பெய்த கடும் மழை காரணமாக, தம்பகஸ்தலாவ தோட்டத்திலுள்ள 4 வீடுகளைக் கொண்ட குடியிறுப்புக்கு பின்புறத்தில் இருந்த 40 அடி உயர மண்மேடு

தொடர்ச்சி P2



## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

சகா, ஏ.எச்.ஏ. ஹுஸைன்

நீண்ட விடுமுறைக்குப் பின்னர், நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளும், இன்று (10) ஒரே தடவையில் மீண்டும் திறக்கப்பட்டு, கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்ச்சி P2

## புதிய அமைச்சரவை புதனன்று பதவியேற்பு

புதிய அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை, ஓகஸ்ட் 12ஆம் திகதியன்று, கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்திலிருக்கும் பார்வையாளர் மண்டபத்தில், நடைபெறும்.

தொடர்ச்சி P2

## ‘தமிழ்ப் பிரதிநிதிகளை அதிகரிப்பதே குறிக்கோள்’



நுவரெலியா மாவட்டத்தில் விருப்பு வாக்குகளை அதிகரிப்பதை விட, உறுப்பினர்களை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்பதில், தலைவர் திகாம்பரம் கவனம் செலுத்தி வந்தார் என, தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான

தொடர்ச்சி P2

### இனிவரும் காலங்களில்

## ‘ஒரு விருப்பு வாக்கை மட்டும் பயன்படுத்துவதே சாமர்த்தியம்’

**பதுளை நிலைமை நாடு முழுக்கப் பரவலாம் என்கிறார் செந்தில்**



தற்போதுள்ள தேர்தல் முறைக்கமைய, எதிர்காலத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய வேண்டுமாயின், எதிர்காலத்தில் ஒரு விருப்பு வாக்கைப் பயன்படுத்துவது

தொடர்ச்சி P2

## ‘தலைமையைக் கைப்பற்ற யாருக்கும் இடமளியேன்’

**முரண்டு பிடிக்கிறார் ரணில்**



நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி தோல்வியுற்றிருந்த போதும், அக்கட்சியின் தலைமைத்துவத்தை விட்டுச் செல்லும் நோக்கம் தனக்கு இல்லையென, ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளாரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

### சூடுபிடிக்கிறது தேசிய பட்டியல்

## இறுதி முடிவுக்காக இன்று சந்திப்பு

றம்ஸி குத்தூஸ்

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில், தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில், இன்று (10) முக்கியக் கூட்டமொன்று நடத்தப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ‘எனக்குக் கிடைத்த வாய்ப்பை தாழ்மையுடன் ஏற்கிறேன்’

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ முன்னிலையில் களனி ரஜமகா விகாரையில் பிரதமராக மஹிந்த ராஜபக்‌ஷ நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை மீண்டும் பதவியேற்றார். அதன் பின்னர், அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், அவர் மேலும் தெரிவிக்கையில், “மக்களுக்கு மீண்டும் சேவை செய்ய, எனக்குக் கிடைத்த வாய்ப்பைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்கின்றேன். அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடனான எங்கள் ஆட்சிக் காலத்தில், இலங்கை முன்னோக்கிப் பயணிக்கும் என்பதை, நான் உறுதியுடன் தெரிவிக்கின்றேன்” என்றும் பதிவிட்டுள்ளார்.

## பிரதமராகப் பதவியேற்றார்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ முன்னிலையில், வரலாற்றுப் புகழ்மிக்க களனி ரஜமஹா விகாரையில் வைத்து, நேற்றுக்காலையில் இருந்த 9.32 சுபநேரத்தில் பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

மதத்தலைவர்கள், மட்டுப்படுத்தப்பட்ட தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்பில், மிகவும் எளிமையான முறையில் இந்தப் பதவியேற்பு வைபவம் நடைபெற்றது.

1970ஆம் ஆண்டில் பெலியத்த தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, நாடாளுமன்றத்துக்கு முதன்முறையாகத் தெரிவான மஹிந்த ராஜபக்‌ஷ, நான்காவது முறையாக, நேற்று (09) பிரதமராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாக்க குமாரதுங்கவால், 2004இல் முதன்முறையாகப் பிரதமராக நியமிக்கப்பட்டார். அதன்பின்னர், 2018 ஒக்டோபர் 28ஆம் திகதியன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், நியமிக்கப்பட்டார்.

அந்த நியமனம் அரசமைப்பை மீறும் செயலாகுமென உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டதால், பிரதமராக நியமிக்கப்பட்ட 52 நாள்களில், தன்னுடைய பதவியை இராஜினாமாச் செய்துகொண்டார்.

மஹிந்த ராஜபக்‌ஷ, புதிய பிரதமராகப் பதவியேற்றுக்கொண்டதன் பின்னர், விஹாரையில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளில் ஜனாதிபதியும் பிரதமரும் அவர் கலந்துகொண்டனர். (படப்பிடிப்பு  பிரதீப் பத்திரண)

## மறுத்தார் சமல்

சபாநாயகர் பதவி தனக்கு வேண்டாம். ஆனால், மக்களுக்கு சேவையாற்றக்கூடிய அமைச்சுப் பதவியொன்றை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசமைப்பில் 18, 19ஆவது திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்ட 2010-2015 காலப்பகுதியில், சமல் ராஜபக்‌ஷ, சபாநாயகராகப் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘தலைமையைக் கைப்பற்ற யாருக்கும் இடமளியேன்’

ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியிருப்பதாகவும், பாரிய தோல்விக்குப் பின்னர், கட்சி எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, கட்சியின் தலைமைப் பதவியில் தான் தொடர்ந்திருக்க உள்ளதாகவும், கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஒருவருக்கும் இடமளிக்கப்போவதில்லை எனவும் கூறியுள்ளார்.

இதன்போது, டீ.எஸ். சேனாநாயக்கவால் உருவாக்கப்பட்ட பழைமையான கட்சியான ஐக்கிய தேசிய கட்சியைச் சிதைத்துவிடக் கூடாதென அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுக்கொண்டனர் எனவும், அதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, தலைமைத்துவத்தில் இருந்துகொண்டே கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகளை உரியவர்களுக்குக் கையளிப்பேன் எனத் தெரிவித்துள்ளாரென அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கடும் மழை

சரிந்து, குடியிருப்புகள் மீது விழுந்துள்ளது.

இதனால், குறித்த வீடுகளில் இருந்த பெருமதிமிக்க பொருள்கள் சேதமடைந்துள்ளதுடன், வீட்டின் சுவர்களும் இடிந்துள்ளன. இந்நிலையில், இந்த வீடுகளில் இருந்த 17 பேரும், உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு, நுவரெலியா பிரதேச செயலகமும் தோட்ட நிர்வாகமும் இணைந்து, தேவையான நிவாரண உதவிகளைச் செய்து வருகின்றன.

இதேவேளை, அக்கரபத்தனை பிரதேச சபைக்குட்பட்ட நல்லதண்ணி தோட்டத்தில், புதிதாக அமைக்கப்பட்ட 25 தனி வீடுகளைக் கொண்ட தொகுதியின் பூமி தாழிறங்கியுள்ளமையால், 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர், உறவினர்களின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என, நுவரெலியா மாவட்ட அனர்த்த நிவாரண அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன், இவ்வாறு ஏதேனும் வீட்டுத் தொகுதிகளில் நிலம் தாழிறங்கும் நிலை ஏற்பட்டால், உடனடியாக அனர்த்த முகாமைத்துவ அதிகாரிக்கு அறிவிக்குமாறும், அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

> **பாதிக்கப் பட்டவர்களுக்கு, நுவரெலியா பிரதேச செயலகமும் தோட்ட நிர்வாகமும் இணைந்து, தேவையான நிவாரண உதவிகளைச் செய்து வருகின்றன**

# ‘ஓய்வு பெறுகிறேன்’

ஹட்டனிலுள்ள மலையக மக்கள் முன்னணியின் கட்சிக் காரியாலயத்தில், நேற்று (09) நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், 1991ஆம் ஆண்டு, பிரதேச சபையில் ஆரம்பமான தனது செயற்பாட்டு அரசியல் பயணம், மாகாண அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் என வளர்ச்சி பெற்றுள்ளது என்றும் இதன் மூலம், மக்களுக்குப் பல சேவைகளைச் செய்துவந்ததாகவும் கூறினார்.

சேவல், மயில், வெற்றிலை, தொலைபேசி எனப் பல சின்னங்களின் கீழ், சவால்களுக்கு மத்தியில் போட்டியிட்டுள்ளதாகவும் ஆனால், எதில் போட்டியிட்டாலும், மக்கள் தன் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்து வந்தனர் என்றும் கூறினார்.

2010, 2015ஆம் ஆண்டுகளில், தான் ஆளுங்கட்சியில் இருந்தே போட்டியிட்டதாகவும் இம்முறை எதிர்க்கட்சியில் இருந்து போட்டியிட்டு கணிசமான அளவு வாக்குகள் கிடைத்தமை, தனது பாரிய வெற்றி என்றும் கூறியுள்ளார்.

அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுச் செல்வதை விடவும், அதிக ஆசனங்களைப் பெற்று நாடாளுமன்றம் செல்வதே சிறப்பு என்று கூறிய அவர், அந்தவகையில், எமது அணியில் ஆறு உறுப்பினர்கள் உள்ளனர் என்றும் தேசியப் படடியல் ஒன்றும் அவசியம் என்றும் கூறினார்.

> **இனிமேல் தேர்தல்களில் போட்டியிடமாட்டேன். அதற்கான அவசியமும் இல்லை. எனவே, இந்தக் கட்சியை மறுசீரமைத்துக் கட்டியழுப்பவேண்டிய தேவை இருக்கின்றது. நான் உங்களை விட்டுச்செல்லமாட்டேன், நீங்கள் என்னை விட்டுச்சென்றால், அதற்கு நான் பொறுப்பு அல்ல**

அந்த உறுதிமொழி நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் இல்லையேல், நிச்சயம் மாற்று நடவடிக்கையில் இறங்கவுள்ளதாகவும் தெரிவித்த அவர், திலகர், லோரன்ஸ், குருசாமி ஆகிய மூவரில் ஒருவருக்கு, நிச்சயம் தேசியப் பட்டியல் வழங்கப்படல் வேண்டும் என்றும் கூறினார்.

இதேவேளை, “இனிமேல் தேர்தல்களில் போட்டியிடமாட்டேன். அதற்கான அவசியமும் இல்லை. எனவே, இந்தக் கட்சியை மறுசீரமைத்துக் கட்டியழுப்பவேண்டிய தேவை இருக்கின்றது. நான் உங்களை விட்டுச்செல்லமாட்டேன், ஆனால், நீங்கள் என்னை விட்டுச்சென்றால், அதற்கு நான் பொறுப்பு அல்ல.

“எம்முடன் நன்றாகப் பழகுகின்றனர். மறுநாள் அந்தப் பக்கம் சென்று முதுகில் குத்துகின்றனர். எனவே, நிச்சயம் மறுசீரமைப்புகளைச் செய்வோம்.

“மலையக மக்கள் முன்னணியின் மாநாடு கூட்டப்படும். எல்லா கட்டமைப்புகளும் கலைக்கப்படும். புதிதாக உருவாக்கப்படும். இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்” என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய அமைச்சரவை புதனன்று பதவியேற்பு

புதிய அமைச்சரவை, ஒகஸ்ட் 14ஆம் திகதியன்று பதவியேற்குமென ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், புதிய உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல், இன்று (10) வெளியாகுமென அறிவிக்கப்பட்டதால், புதிய அமைச்சரவை பதவியேற்பை இரண்டு நாள்களுக்கு முன்னமே நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலரும் உள்வாங்கப்படுவர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ‘ஒரு விருப்பு வாக்கை மட்டும் பயன்படுத்துவதே சாமர்த்தியம்’

மட்டுமே புத்திசாலித்தனமாக இருக்கும். இதனைச் சரியாக ஆராய்ந்து, விருப்பு வாக்குகளை அளித்து, தமிழ் பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக்கொள்ள எதிர்காலத்தில் செயற்பட வேண்டும்” என்று, தெரிவித்துள்ள பிரதமரின் பெருந்தோட்ட இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், தனக்கு வாக்களித்த மக்களுக்கு, என்றும் பாதுகாப்பு அரணாக இருக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது குறித்துஅவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தற்போதுள்ள தேர்தல் முறைமையின்படி, நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. எனினும், பதுளையில் எதிர்க்கட்சியில் என்னைவிடக் குறைவாக விருப்பு வாக்குகளைப் பெற்ற சமிந்த விஜேசிறி (36,291 வாக்குகள்) கூட, நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளார். எனினும், எனக்கு மக்கள் தந்த ஆதரவு மனமார்ந்த நன்றிகள்” எனத் தெரிவித்துள்ளார்.

“பதுளை மாவட்டத்தில், ஆளும் கட்சியில் வெற்றிபெற்ற பெரும்பான்மை உறுப்பினர்களைப் போல, எனக்கு வாக்களித்த மக்களின் குரலாய் அரசாங்கத்தில் ஒலித்து, அவர்களுக்கான அபிவிருத்தியைக் கொண்டுவர முடியவில்லை என்பதை நினைத்து மனம் வருந்துகிறேன்.

“மொட்டுச் சின்னத்தில் எனக்கு வழங்கிய 40 ஆயிரம் வாக்குகளில், சிங்கள பெரும்பான்மையின உறுப்பினர்களுக்கும் இரு விருப்பு வாக்குகளை வழங்கியதால் ஆளும் கட்சியில் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் போயுள்ளது. குறிப்பாக, மொட்டுக் கட்சியில் சாமர சம்பத் தஸநாயக்க, டிலான் பெரேரா, ஜானக திஸ்ஸகுட்டியாரச்சி ஆகியோருக்கும் தமிழ் மக்கள் தமது விருப்பு வாக்கை வழங்கியுள்ளனர். சிறு தொகை பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றிருந்த அவர்கள், தமிழர்களின் விருப்பு வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளனர். இதனால், தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் போயுள்ளது.

“இதுவோர் ஆபத்தான சூழல். பதுளை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சூழல், நாடு முழுவதும் பரவும் பட்சத்தில், சிறுபான்மையின மக்களின் விருப்பு வாக்குகளால் சிறுபான்மையினப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போகும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே, எதிர்காலத்தில் இந்த விடயத்தில் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும்” என்று, செந்தில் தொண்டமான் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ‘தமிழ்ப் பிரதிநிதிகளை அதிகரிப்பதே குறிக்கோள்’

சோ. ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே, மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தொடர்ந்து தெரிவித்துள்ள அவர், சில வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒருவருக்கு மாத்திரம் வாக்குகளைப் பெற்றுக்கொடுத்து, சக வேட்பாளர்களைக் கைவிட்டுள்ள நிலைமையே, நுவரெலியா மாவட்டத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுவதாகவும் அந்த வகையில், தங்களது தலைவர் திகாம்பரம், தன்னுடைய சக வேட்பாளர்களையும் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்துள்ளார் என்றும் கூறினார்.

நுவரெலியா மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து, தமிழ் முற்போக்கு கூட்டணியின் பலத்தை இல்லாமல் செய்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, தனது கட்சி சார்பில் புதிய தமிழ் வேட்பாளர்களைக் களமிறக்கியும் சுயேச்சைக் குழுக்களை மறைமுகமாக ஊக்குவித்தும் வந்தது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

## இறுதி முடிவுக்காக இன்று சந்திப்பு

சஜித் பிரேமதாஸ தலைமையில், ஐக்கிய மக்கள் சக்திக்குள் இணைந்து போட்டியிட்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் முற்போக்கு கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள், தேசிய பட்டியல் விவகாரத்துக்காக, இன்று (10) வரையிலும் காலக்கெடு விதித்துள்ளன.

தங்களுக்கு உரிய தேசிய பட்டியல் ஆசனங்களை வழங்காவிடின், நாடாளுமன்றத்தில் தாங்கள், தனிக் குழுவாகச் செயற்படப்போவதாக அறிவித்துள்ளன. இந்நிலையிலேயே இன்று (10) முக்கியக் கூட்டமொன்று சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெறவுள்ளது.

இதை உறுதிப்படுத்த, மேற்குறித்த கட்சிகளின் தலைவர்களுடன் தொடர்பு கொள்ளப் பலமுறை முயற்சித்த போதும், அவர்களின் அலைபேசிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

## ‘நீதிமன்ற அனுமதி பெறவேண்டும்’

அத்துடன், பிரேமலால் ஜயசேகரவின் பெயரை, வர்த்தமானியில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் நேற்று (09), அவரது குடும்பத்தார் உறுதிப்படுத்தினர்.

இதேவேளை, நிரபராதியான தனது தந்தையை, மரண தண்டமையிலிருந்து விடுவிப்பதற்கான ஏற்பாடுகளை, சட்டத்தரணிகள் ஊடாக முன்னெடுத்து வருவதாக, அவரது புதல்வி, செனாலி ஜயசேகர தெரிவித்தார்.

பிரேமலால் ஜயசேகரவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை உறுதிப்படுத்தி, நீதிமன்றத்தில் அவரது பெயரைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக, நாடாளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் நீல் இத்தவெல தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில், சகல வகுப்புகளும் ஆரம்பமாகும். ஏனைய பாடசாலைகளில், 5,10,11,12,13 ஆகிய 5 வகையான வகுப்புகள் எல்லா நாள்களும் நடைபெறும்.

ஏனைய வகுப்புகள் நாள் ரீதியில் நடைபெறும். அதாவது, நாளொன்றுக்கு 7 வகையான வகுப்புகள் நடைபெறும். அன்றைய நாளுக்கு, அந்த வகுப்பு மாணவர்கள் மாத்திரமே சமூகமளிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

அதன்படி, திங்கள் கிழமை தரம் 01,06ஆம் வகுப்பு மாணவர்களும், தரம் 02, 07ஆம் வகுப்பு மாணவர்கள் செவ்வாய்க்கிழமையும் புதன்கிழமை தரம் 03, 08ஆம் வகுப்பு மாணவர்களும் வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் தரம் 04, 09ஆம் வகுப்பு மாணவர்களும் பாடசாலைக்குச் சமூகமளிக்க வேண்டும்.

அதாவது, வாரத்தில் ஒருநாள் அல்லது இரண்டு நாள்கள் மாத்திரமே மாணவர்கள், பாடசாலைக்குச் சமூகமளிக்கும் வகையில் இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பேணும் வகையில், மிகவும் கவனமாக இக்கால அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று முற்றாக நாட்டைவிட்டு நீங்கியதும் காலப்போக்கில் வழமையான நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேரத்தைப் பொறுத்தவரை, தரம் 10,11,12,13 வகுப்புகளுக்கு காலை 7.30 முதல் மாலை 3.30 வரையும் ஏனைய வகுப்புகளுக்கு வழமையான நேரப்படியும் நடைபெறும்.

பி.ப. 1.30 மணிக்கு முடிவடையும் வகுப்புகளுக்கு ஓர் இடைவேளை வழமைபோன்றும் பி.ப. 3.30 மணிக்கு முடிவடையும் வகுப்பு மாணவர்களுக்கு இரண்டு இடைவேளைகள் அதுவும் 20 நிமிடத்துக்கு மேற்படாத வண்ணம் வழங்கப்படுதல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

> **பாடசாலை மட்டக் கணிப்பீடுகள், க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான முடிக்கப்படாத பரீட்சைகளைத் தவிர, தவணைப் பரீட்சைகளையோ வேறு பரீட்சைகளையோ நடத்தக்கூடாது**

> **பி.ப 3.30 மணிவரை நேரசூசி உள்ள ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஆசிரியர்களுக்குமான கடமை நேரம் மு.ப. 7.30 மணி தொடக்கம் பி.ப 1.30 மணி வரை இருக்கும்**

அனைத்து ஆசிரியர்களும் கல்விசாரா ஊழியர்களும் இன்று (10) முதல் கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும். கற்பித்தலுக்கு மேலதிகமாக மேற்பார்வை மதிப்பீடுகளைப் பரீட்சித்தல், சுகாதாரம், ஒழுங்கு பேணல் கருமங்களிலும் பொறுப்புகளைக் கையேற்க வேண்டும்.

பி.ப. 3.30 மணிவரை நேரசூசி உள்ள ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஆசிரியர்களுக்குமான கடமை நேரம் மு.ப. 7.30 மணி தொடக்கம் பி.ப.1.30 மணி வரை இருக்கும்.

பாடசாலை மட்டக் கணிப்பீடுகள், க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான முடிக்கப்படாத பரீட்சைகளைத் தவிர, தவணைப் பரீட்சைகளையோ வேறு பரீட்சைகளையோ நடத்தக்கூடாது என்றும் கல்வியமைச்சால் ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.